ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி

# இலங்கையின் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்கான திட்ட முன்மொழிவு

அனைத்துக் கட்சி பிரதிநிதிகள் குழுவினதும்
அரசியலமைப்பு சட்ட திருத்தத்திற்கு
ஆலோசனை வழங்கும் நிபுணர்கள் குழுவினதும்

கருத்திற்கும், கவனத்திற்குமாக
அனைத்து கட்சி பிரதிநிதிகள் குழுவின் தலைவர்
பேராசிரியர் திஸ்ஸவிதாரன அவர்களிடம்
சமர்ப்பிக்கப்பட்டது

ஈ.பி.ஆர்.எல்.எவ் (பத்மநாபா)

மார்ச் 2007

# முன்னுரை

இலங்கையின் இனப்பிரச்சினை தீர்க்கப்படாமல் தொடர்ந்து இழுத்தடிக்கப்படுவதால் நாடு முழுவதுவும் யுத்த நெருக்கடியிலேயே காலத்தைப் போக்குகின்றது.... ஒரு தேசம் முற்றாகச் சீரழிக்கப்பட்டுள்ளது... ஒரு இனம் சின்னாபின்னமாக சிதைக்கப்பட்டுள்ளது. இலங்கைத் தமிழர்களில் ஐந்து லட்சத்துக்கும் மேற்பட்டோர் தமது சொந்த தேசத்திலேயே இரண்டு தசாப்தங்களுக்கு மேலாக கையேந்தி வாழும் அகதிகளாக - மானிட மிருகங்களாக உயிர்வாழ வைக்கப் பட்டிருக்கின்றார்கள். பத்து லடசத்துக்கு மேற்பட்டோர் மேலைத்தேய நாடுகளிலும் இந்தியாவிலும் அகதிகள் என்ற பட்டத்துடன் அந்நிய நாடுகளின் அநுதாபத்தில் வாழ நிர்ப்பந்திப்பபட்டுள்ளார்கள். யுத்தத்தால் கொல்லப்பட்டவர்கள் கணக்கு எழுபதாயிரம் தான் அதைவிடப் பத்து மடங்கு அதிகமானோர் எந்த நேரமும் கொல்லப்படலாம் என்னும் வகையாக யுத்தப் பிரபுக்களின் துப்பாக்கிக் குழல்களின் முன்னால் சாவுப்பயத்துடன் இருக்க வைக்கப்பட்டிருக்கிறார்கள். ஜனநாயகம் சிறிதும் இல்லாமல், அடிப்படை மனித உரிமைகள் எதுவுமற்றவர்களாக - ஒவ்வொரு நிமிடமும் உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு - துப்பாக்கி ஏந்தியவர்களின் தலையாட்டி பொம்மைகளாக, நடமாடும் மானிடப் பிண்டங்களாக உயிர் வாழ மட்டுமே இலங்கையின் வடக்கு - கிழக்கில் தமிழர்கள் அனுமதிக்கப் பட்டிருக்கிறார்கள். நேற்று, இன்றைக்கு மேலும் நாளை சில மாதங்கள் அல்லது ஓரிரு வருடங்களுக்கு மட்டுந்தான் இந்த அவல நிலையென்றாற் கூட மக்கள் நம்பிக்கையோடு, எதிர்பார்ப்போடு அழிவுகளையும் இன்னல்களையும் தாங்கிக் கொள்வார்கள். ஆனால், என்றைக்கு இந்தப்பிரச்சினைக்குத் தீர்வு வரும் என யாராலும் கூற முடியாத அளவுக்கு இந்த யுத்தப் பிரளயம் தொடர்கிறது.

இந்த மோசமான நிலைமைகளுக்குப் பின்னால் பல அம்சங்களை உள்ளடக்கிய ஓர் அரசியற் பிரச்சினை இருப்பதை பகுத்தறிவுடைய அனைவரும் அறிவர். அதற்கு முழுமையானதோர் தீர்வு காணப்பட வேண்டுமென்பதை அனைத்து அரசியற் தலைவர்களும் ஒப்புக் கொண்டுமுள்ளனர். ஆனால், 1957ம் ஆண்டின் பண்டாராநாயக்கா – செல்வநாயகம் ஒப்பந்தத்தை ஆரம்பமாகக் கொண்டு பார்த்தாலும் கூட அதற்கான முயற்சிகளும் 50 ஆண்டுகளை அடைந்து விட்டன. காலம் கடத்தும் பேச்சு வார்த்தைகள், கைவிடப்பட்ட ஒப்பந்தங்கள், கைகூடாமற் போன அரசியல் யாப்பு திருத்த முயற்சிகள் என்பன பொன் விழாக் காணுகின்றன. இலங்கையின் ஜனாதிபதிகள் அடுத்தடுத்து வாக்குறுதிகளை அளித்து வந்திருக்கிறார்கள், இந்தியா நேரடியாகத் தலையிட்டு தன் நாட்டுப் போர்வீரர்கள் 2000 பேரைப் பலி கொடுத்து இலங்கையில் சமாதானத்தை உருவாக்க முயற்சித்தது. உலகின் பிரதானமான நாடுகளெல்லாம் திரண்டு வந்து சமாதானத்துக்காக முயற்சித்தன. ஆனால் எதுவும் சமாதான நோக்கங்களைச் சாதிக்கவில்லை.

யுத்த வெறிபிடித்தவர்கள் தமிழ்ச் சமூகத்திலிருந்து – உருவாகிய ஆக்கபூர்வமான ஆற்றல் மிக்க தலைவர்கள், சமூகப் பிரதிநிதிகளையெல்லாம் அழித்துவிட்டனர். அரசியல் ரீதியில் தமிழ்ச் சமூகமே தலையற்ற முண்டமாக்கப்பட்டுள்ளது. பரந்து பட்ட தமிழ்ப் பொதுமக்கள் பிரிவினையை நம்பியிருக்கவில்லை என்பதை புலிகள் உட்பட அனைவரும் அறிவர். பிரிவினை வெறிபிடித்தவர்களின் கொலையாற்றலின் பிரமாண்டத்தின் மத்தியிலும் மிகப் பெரும்பான்மையான தமிழர்கள் ஒரு தர்ம நியாயமான – நவீன உலகின் அரசியல் நீதி அளவு கோல்களுக்கு ஒத்ததான ஓர் அரசியற் தீர்வைத்தான் வேண்டி நிற்கின்றார்கள் என்பது பொதுவாக அறியக் கூடிய – அங்கீகரிக்கப்பட்டுள்ள ஒன்றே. ஆனால், அப்படியானதொரு தீர்வை நோக்கி விடயங்களை விரைவு படுத்தாமல் புலிகளின் யுத்த நடவடிக்கைகளையும் யுத்த ஆற்றலையும் காரணம் காட்டி தமிழ் மக்கள் எதிர்பார்க்கும் அரசியல் நீதியை

வழங்குவதில் காலம் தாழ்த்துவது இலங்கை அரசினதும் குறிப்பாக சிங்களத் தலைவர்களினதும், சர்வதேச சமூகத்தினதும் தவறே.

மிகவும் சிக்கலாக வேருன்றிப் போயிருக்கும் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண வேண்டுமானால்:

1) பிரச்சினையின் தொடக்கம் வளர்ச்சி பற்றி வரலாற்று ரீதியான உண்மையான மீளாய்வும் அடிப்படைப் பிரச்சினைகளை தீர்க்கமாக அடையாளம் காணுதலும் வேண்டும்,

2) அப்பிரச்சினைகளுக்கு முழுமையானதொரு அரசியற் தீர்வை ஏற்படுத்தும் வகையாக நேர்மையானதும் நியாயமானவையுமான அரசியல் இலக்குகள் வேண்டும்,

3) சிங்கள மக்கள் மத்தியில் ஏழு சதவீத ஆதரவைக் கூட பெற்றிராத சிங்கள இனவாத தீவிரவாதத்தையும், நியாயமானதொரு அரசியற் தீர்வு மூலம் தோற்கடிக்கப்படக் கூடிய வடக்கு-கிழக்கு பிரிவினை வாதத்தையும் பொருட்படுத்தாமல் சரியானதை, நீதியானதை நிலைநாட்டும் அஞ்சாமையும் தீர்மானகரமான முன்முயற்சிகளும் வேண்டும்.

இனப்பிரச்சினையின் உள்ளடக்கங்களைக் கண்டறிவதற்கும் அவற்றுக்கான தீர்வுகளை அடையாளம் காண்பதற்கும் பின்வருவனவற்றை புரிந்து கொள்வது அவசியமாகும்:

1. பாராளுமன்றவாத தமிழ்த் தலைவர்களான சேர்.பொன்.அருணாசலம், திரு.ஜி.ஜி.பொன்னம்பலம், திரு.எஸ்.ஜே.வி.செல்வநாயகம், மற்றும் திரு.அ.அமிர்தலிங்கம் போன்றோர் சுமார் 60 ஆண்டுகளாக ஏழுப்பிய பிரச்சினைகள் மற்றும் முன்வைத்த பிரேரணைகள்,

2. பண்டா - செல்வா ஒப்பந்தத்தின் போது திரு.எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்காவும், ட்டலி - செல்வா ஒப்பந்தத்தின் போது 1965ல் திரு. டட்லி சேனநாயக்காவும், 1977 பொதுத் தேர்தல் அறிக்கையில் திரு ஜே.ஆர்.ஜெவர்த்தனாவும், 1988 ஜனாதிபதித் தேர்தல் அறிக்கையில் திருமதி சிறிமா பண்டாரநாயக்காவும் தமிழர்களுக்கு ஏற்படுத்தப்பட்ட அநீதிகளை அங்கீகரித்து அவை தொடர்பாக அவர்கள் பகிரங்கமாக ஒப்புக்கொண்டவைகள்:

3. 1960க்கும் 1977க்கும் இடைப்பட்ட காலத்தைத் தவிர இலங்கை சுதந்திரம் பெற்ற நாள் தொடக்கம் இன்று வரை லங்கா சமசமாஜக் கட்சி, இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி ஆகியவற்றின் தலைவர்கள் இனப்பிரச்சினை தொடர்பாக வெளியிட்ட கருத்துக்கள் மற்றும் கட்சித் தீர்மானங்கள்

4. 1983க்கும் 1987க்கும் இடைப்பட்ட காலத்தில் இந்தியாவின் ஈடுபாட்டுடன் நடைபெற்ற பேச்சுவார்த்தைகள் மற்றும் ஏற்கப்பட்ட தீர்மானங்கள்

5. ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைமையிலான மாகாண அரசு ஆட்சிக் காலத்தில் வடக்கு-கிழக்கு மாகாண சபையினால் முன்வைக்கப்பட்ட மாற்றுத்திட்டங்கள் மற்றும் 19 அம்சக் கோரிக்கைகள்,

6. திரு.மங்கள முனசிங்காவின் தலைமையில் அமைக்கப்பட்ட பாராளுமன்றக் கமிட்டியின் முன்னால் தமிழர் தரப்பிலும் மற்றும் திரு.மங்கள முனசிங்காவினாலும் முன்வைக்கப்பட்ட சிபார்சுகள்,

7. திருமதி சந்திரிகாவினால் 1995ல் முன்வைக்கப்பட்ட பிரேரணைகள் மற்றும் 1997 ஆண்டில் அவரின் தலைமையில் தயாரிக்கப்பட்ட புதிய அரசியல் யாப்புக்கான சட்ட வடிவங்கள் மேலும் அவை தொடர்பாக தமிழர்கள் தரப்பில் முன்வைக்கப்பட்ட மாற்றுக் கருத்துக்கள்

ஆகியவை ஒரு சரியான நியாயமான அரசியற் தீர்வுக்கான பிரேரணைகளைத் தீர்மானிப்பதற்கு அவசியமான அடிப்படை ஆவணங்களாகும். மாறாக இன்று மேலெழுந்தவாரியாகத் தெரியும் பிரச்சினைகளை மட்டும் அவரவர் தத்தம் விருப்பத்திற்கேற்றவாறாகச் சுட்டிக்காட்டி சுருக்கமான முறையிலும் குறுக்கான வழிகளிலும் தீர்வுகாண முற்படுவதுவும் அரசியற் தீர்வை நோக்கிய இலக்குகளுக்கு விடயங்களை நகர்த்தமாட்டா என்பதை அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும். ஒரு சில அரசியற் தலைவர்களும் ஆய்வாளர்களும் யுத்தத்தினால் மக்களுக்கு ஏற்பட்டிருக்கும் பரிதாப நிலைகளை பல பரிமாணங்களில் படம் பிடித்து அவற்றை உயர்த்திக் காட்டி “இன்று மக்களுக்கு அரசியற் தீர்வு எவ்வாறு இருக்க வேண்டுமென்பதில் அக்கறையில்லை. அவர்களுக்கு வேண்டியதெல்லாம் யுத்தமற்ற ஒரு சமாதானமே” என முடிவு செய்து பிரகடனம் செய்கின்றனர். இவ்வாறு பிரகடனம் செய்வோர் ஒவ்வொருவரும் தத்தமக்கென ஒரு நோக்கோடு உள்ளனர். புலி ஆதரவாளர்கள். சிங்கள பேரினவாதிகள், விடயங்களை நுனிப்புல் மேய்வது போன்று புரிந்து கொள்ளும் பரிதாபத்துக்குரிய அவசரக்காரர்கள், அரசியற் தீர்வு முயற்சிகளில் விரக்தி கொண்டோர், தொண்டர் நிறுவனத் தொழில் முயற்சியாளர்கள் எனப் பலவகையினர் இவ்வகையாக அரசியற் தீர்வு பிரதானமில்லை அல்லது எந்த அரசியற் தீர்வானாலும் இப்போதைக்குப் பரவாயில்லை என வாதிடுகின்றனர்.

யுத்தப்பிரபுக்களின் வசதிக்கான யுத்த நிறுத்தம் மீண்டும் மிக மோசமான யுத்த அழிவுகளுக்கே வழிவகுத்தமையே அனுபவம். மக்களின் அடிப்படை அபிலாஷைகளை, மக்களின் மிகக் குறைந்த எதிர்பார்ப்புக்களை நிறைவேற்ற முடியாத அரசியற் தீர்வு சமாதானத்தை நிரந்தரமாக்காது. அது மீண்டும் பிரிவினைவாதிகளையே மக்கள் மத்தியில் செல்வாக்குள்ளவர்களாக ஆக்கும். அரைகுறையான அரசியற் தீர்வினை நியாயமான நேர்மையான அரசியற் சக்திகள் எத்தனை காலம் தலையாட்டி ஏற்று நிற்பார்கள். அல்லது அரைகுறை நிலையிலிருந்து முன்னேற்றத்தை நோக்கி நகர்த்த அப்போது மட்டும் சிங்கள பேரினவாதிகள் விட்டுக் கொடுத்து செயற்படுவார்கள் என்பது எப்படி நடக்கும். புலிகளின் பாசிசம் ஒழிந்தால் சரி! புலிகள் ஒழிந்தால் தான் தமிழர்கள் மத்தியிலுள்ள ஜனநாயக சக்திகளின் குரல் இந்த உலகத்துக்குக் கேட்கும், தமிழர்களின் நியாயமான போராட்டம் சரியான முறையில் முன்னேறும், இயங்கும் தன்மையைப் பெறும் என்பது வாதமாக இருந்தால் நாம் இப்போதைக்கு பிழையான அல்லது அரைகுறையான அரசியல் தீர்வுக்கு முண்டு கொடுத்து நிற்க வேண்டியதில்லை.

வடக்கு-கிழக்கு வாழ் மக்கள் அனைவருக்கும் யுத்தமற்ற ஒரு சூழல் வேண்டும் என்பதில் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணிக்கு எந்தவித கருத்து வேறுபாடுமில்லை. புலிகளின் பலத்தாலும், வன்முறைகளாலும் தமிழர்களுக்கு தொடந்து அழிவைத் தவிர, எந்த வகையிலும் ஒரு சிறிதளவு நன்மைகூட ஏற்பட மாட்டாது என்பதையும் புலிகள் அழிந்து போவதால் தமிழர்களுக்கு சிறிதளவு கூட நட்டம் ஏற்படமாட்டாது என்பதையும் ஈபிஆர்எல்எவ் இப்போதல்ல கடந்த பல ஆண்டுகளாகவே கூறிவந்திருக்கின்றது.

இலங்கையின் இனப்பிரச்சினை புலிகளின் பயங்கரவாதத்திலிருந்து தொடங்கவில்லை, மாறாக இலங்கையின் அரசியல் அமைப்பும் அரச நிறுவன அமைப்புக்களும் இனவாரியாக தமிழர்களின் அடிப்படை நலன்களுக்கும் உரிமைகளுக்கும் பாதுகாப்புக்கும் எதிராக பல

தசாப்தங்களாகச் செயற்பட்டு வந்தன. தொடர்ந்து அந்தப் பாதகங்கள் வெவ்வேறு வடிவங்களிலும் தளங்களிலும் விரிவுபடுத்தப்பட்டனவே தவிர, மாறாக நிலைமைகளில் திருத்தங்களை மேற்கொள்வதற்காக இன்றுவரை அதில் மாற்றங்கள் எவையும் செய்யப்படவில்லை என்பதுவுமே அரசியற் தீர்வை வலியுறுத்தக் காரணங்களாக உள்ளன.

நீதியானதோர் அரசியற் தீர்வுப் பெட்டகம் நாட்டின் அரசியற் சட்டமாக வேண்டும், அதற்குத் தேவையான அரச நிறுவனங்கள் கட்டப்பட வேண்டும், நிர்வாக அமைப்புக்களில் தேவையான சரிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும், இவற்றின் மூலம்தான் நிரந்தர சமாதானத்துக்கான அடித்தளம் உருவாக்கப்பட முடியும் என்பதை ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி எப்போதுமே உறுதியாகவும், தெளிவாகவும் கூறிவந்துள்ளது. இந்திய-இலங்கை சமாதான ஒப்பந்தத்தின் மூலம் உருவான மாகாண சபையினூடாக இலங்கையின் அரசியற் போக்கில் ஒரு மாற்றத்தை உருவாக்க உழைத்தோம் திரு.பிரேமதாசாவும் - பிரபாகரனும் கூட்டுச் சேர்ந்து அந்த முயற்சிகளையெல்லாம் நாசம் செய்தனர். திருமதி.சந்திரிகா அவர்களின் அரசியற் தீர்வுக்கான முன்முயற்சிகளுக்கு - அவற்றிலிருந்த குறைபாடுகளின் மத்தியிலும் - ஆதரவளித்தோம். அதேவேளை அவர் முன்வைத்த பிரேரணையிலிருந்த குறைபாடுகளை சுட்டிக்காட்டி அவற்றுக்கான மாற்றுக் கோரிக்கைகளையும் முன்வைத்தோம். அந்த முயற்சிகள் களத்துக்கு நடைமுறையாக மாற்றப்படாமற் போனது துரதிஷ்ட வசமே. ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தேர்தலின் போது கொடுத்த வாக்குறுதியின் அடிப்படையில் அனைத்து சமூகத்தவரினது அடிப்படை நலன்களுக்கும் ஏற்புடையதான ஓர் அரசியற் தீர்வை உருவாக்குவதற்காக நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் அனைத்துக் கட்சிகளினதும் குழுவொன்றை நியமித்தார், அத்துடன் அரசியல் யாப்பில் அனுபவமும் அறிவும் கொண்ட நிபுணர்கள் குழுவொன்றையும் நியமித்தார். நிபுணர்கள் குழுவில் பெரும்பான்மையினர் ஒரு சிபார்சு அறிக்கையை வெளியிட்டுள்ளனர். அதைத் தொடர்ந்து அனைத்து கட்சி பிரதிநிதிகள் கமிட்டியின் தலைவர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண தாமாக ஒரு சிபார்சு அறிக்கையை முன் மொழிந்துள்ளார். இந்த அறிக்கைகளையும் அத்துடன் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியினால் கடந்த காலங்களில் முன்வைக்கப்பட்ட பிரேரணைகளையும், மேலும் ஏற்பட்ட மாற்றங்களையும் கருத்திற் கொண்டு ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி ஓரளவு முழுமையான தீர்வு திட்ட முன்மொழிவுகளின் தொகுப்பை அனைத்து கட்சி பிரதிநிதிகள் குழுவின் கருத்திற்கும் கவனிப்பிற்கும் முன்வைத்துள்ளது.

இலங்கையில் இனமுரண்பாட்டு அரசியல் வரலாற்றோடும், இலங்கையின் பல்வேறு சமூகங்களிற்கிடையேயான உறவுகளிலுள்ள சிக்கல்களோடும் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியானது முப்பது ஆண்டுகளுக்கு மேலான ஆழமான பட்டறிவுகளைக் கொண்டிருக்கின்றது. மேலும் இலங்கையில் பரிசோதிக்கப்பட்ட மாகாண ஆட்சியமைப்பு, ஏற்கனவே மேற்கொள்ளப்பட்ட அதிகாரப் பகிர்வில் ஏற்பட்டுள்ள குறைபாடுகள், அதில் ஏற்பட்ட சிக்கல்கள் ஆகியவற்றோடும் நாம் ஒப்பீட்டு ரீதியில் மிக அதிக அளவில் பின்னிப் பிணைந்த அனுபவமும் புரிதலும் உடையவர்கள் என்பதை பிரகடனப்படுத்த வேண்டிய அவசியமில்லை.

இன்றைய காலகட்டத்தில் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியினராகிய நாம் அரசியற் தீர்வுக்காக முயற்சிக்கப்படும் அல்லது அந்த நோக்கத்துடன் ஏற்படுத்தப்பட்டுள்ள அரங்கங்களில் உள்ளான ஒரு பாகமாக இருக்க முடியாவிட்டாலும் வெளியமைப்பாகவேனும் நின்று ஒரு காத்திரமான ஆக்கபூர்வமான தாக்கத்தை ஏற்படுத்த முயற்சிப்பது ஒரு சமூகக் கடமை எனக் கருதுகின்றோம். சிங்களத் தலைவர்கள் எவ்வகையான தீர்வை முன்வைத்தாலும் அதை எதிர்ப்பதற்கு வசதியாக தமிழர்களின் குறைந்த பட்ச அடிப்படைக் கோரிக்கைகள் என்னவென்று தீர்க்கமாக வெளியிடாதிருப்பது எவ்வாறு தவறான அணுகுமுறையோ அவ்வாறே சிங்களத் தலைவர்கள் எதைத் தந்தாலும் பரவாயில்லை

அவர்களோடு ஒட்டிக் கொண்டே அரசியல் வாழ்வைக் கொண்டு செலுத்தலாம் எனக் காத்திருப்பதுவும் தமிழர்களின் நலன்களுக்கு எதிரானதே.

இலங்கையில் இடம்பெற்று வரும் முன்னணி அரசியல் விவகாரங்களில் துரதிஷ்டவசமாக இலங்கைத் தமிழர்களின் பிரதிநிதித்துவம் உரிய அளவில் இடம்பெறவில்லை. நாடாளுமன்ற உறுப்பினர்கள் என்ற அடிப்படையில் மட்டுமே உத்தியோகபூர்வமான அரங்கங்களில் பிரதிநிதித்துவம் வழக்கப்படுவதனாலேயே இந்த துர்ப்பாக்கியமான நிலைமை தமிழர்களுக்கு ஏற்பட்டுள்ளது. இலங்கைத் தமிழர்களின் பெயரில் நாடாளுமன்றத்தில் இருப்போரில் ஒருவரைத் தவிர ஏனைய அனைவரும் புலிகளின் அடிமைகளாக இருப்பதனால் அவர்கள் தமிழர்களின் நலன்களைப் பிரதிநிதித்துவப்படுத்த மறுத்து வருகின்றார்கள். இவர்கள் ஆங்காங்கே பத்திரிகைகளிலும் பேச்சளவிலும் பட்டும்படாமல் சமஷ்டி அமைப்பே தீர்வு எனக் குறிப்பிட்டாலும் அதை உரிய அரங்கங்களில் உறுதியாகவும் விரிவான உள்ளடங்கங்களுடன் முன்வைக்க மறுத்து புலிகள் மட்டுமே அந்த உரிமையுடையவர்கள் என்கிறார்கள். புலிகளோ பிரிவினையைத் தவிர வேறெதனையும் தீர்க்கமாகப் பேசுவதற்குத் தயாராகவில்லை. எனவே புலிகளால் உருவாக்கப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களும் நடைமுறையில் பிரிவினைவாதிகளாக இருப்பதால் இவர்களும் தமிழர்களின் உண்மையான அபிலாஷைகளை வெளிப்படுத்தத் தவறுகிறார்கள்.

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியினரால் இங்கு முன்வைக்கப்பட்டுள்ள அரசியற் தீர்வுக்கான முன்மொழிவுகள் மொத்தத்தில் கீழே பத்து (10) பிரிவுகளாக தரப்பட்டுள்ள விடயங்களைக் கருத்திக் கொண்டவையாகும்.

1. கடந்த 70 ஆண்டுகளாக சிங்கள இனப்பெரும்பான்மை அதிகாரங்களினால் தமிழர்கள் இரண்டாம் பட்ச குடிமக்கள் போல் பாரபட்சங்களுக்கு உள்ளாக்கப்பட்டமை, தமிழர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட இனப் படுகொலைக் கலவரங்கள், சிங்களக் குடியேற்றங்களாலும் அரச படைகளாலும் தமிழர்கள் தமது சொந்த பாரம்பரிய பிரதேசங்களிலேயே பாதுகாப்பற்றவர்களாக ஆக்கப்பட்டமை, தமிழர்கள் சிறுபான்மை என்பதனால் அவர்களின் பிரதிநிதிகள் ஆட்சி அரங்கங்களில் எந்தவகையிலும் பேரம்பேச வக்கற்றவர்களாகவும் அதிகார பீடங்களில் எந்தவித செல்வாக்கும் அற்றவர்களாகவும் ஆக்கப்பட்டமை, அரச படைகள், பொலிஸ் மற்றும் அரசாங்க நிர்வாகங்களில் தமிழர்கள் அர்த்தமற்ற விகிதாசாரத்துக்கு குறைக்கப்பட்டமை ஆகியவை இலங்கையில் வளர்ந்த இனமுரண்பாட்டின் அடிப்படைக் காரணங்களாகும்

2. அத்துடன், கடந்த இருபது ஆண்டுகாலமாக புலிகள் தமிழர்கள் மத்தியில் பல்லாயிரக் கணக்கானோரைப் படுகொலை செய்து ஜனநாயகத்தை முற்றாகக் குழி தோண்டிப் புதைத்து முழுத் தமிழ்ச் சமுதாயத்தையும் பயங்கரவாத மிரட்டலின் கீழ் அரசியல் அடிமைகளாக்கி வைத்துள்ளனர். வடக்கு-கிழக்கின் முஸ்லிம் மக்களை அவர்களின் பாரம்பரிய பிரதேசங்களிலிருந்து விரட்.டுவது மற்றும் படுகொலைகள் புரிவது என தொடர்ந்து முஸ்லிம் இன ஒழிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். வடக்கு-கிழக்கிலும் அடுத்துள்ள சிங்கள மாவட்டங்களிலும் சிங்கள மக்கள் மீது பயங்கரவாத படுகொலைகளை அடுத்தடுத்து நடாத்தி வருகின்றனர். புலிகளின் இவ்வாறான நடவடிக்கைகள் இனமுரண்பாடுகளை மேலும் சிக்கலான நிலைமைகளுக்கு உள்ளாக்கியுள்ளது.

3. ஜனநாயக சக்திகள் ஒருமுகப்பட்டு நின்று சரியான நியாயமான ஓர் அரசியற் தீர்வை நடைமுறைப்படுத்துவதன் மூலம் புலிப் பயங்கரவாதத்தையும் அதன் ஆயுத வல்லமைகளையும் படிப்படியாக இல்லாதொழித்து விட முடியும். எனவே புலிகள்

என்பது ஒரு தற்காலிகமான பிரச்சினையே. ஆனால் ஒன்றுபட்ட இலங்கையின் அரசியல் அமைப்பில் சிங்கள இனப் பெரும்பான்மை ஆதிக்கம் செலுத்துவது தவிர்க்கப்பட முடியாத ஒன்றாகும். இது சிங்கள மக்களின் சனத்தொகை மற்றும் பிரதிநிதித்துவ எண்ணிக்கைகளின் அடிப்படையைக் கொண்டதால் தற்காலிகமானதொரு விடயமாகாது. எனவே இங்கு சட்டங்களை ஆக்குவதிலும் அவை நிறைவேற்றப்படுவதிலும் இலங்கையின் சிறுபான்மையான தேசிய இனங்களுக்கு அரசியல் யாப்பு பூர்வமான மற்றும் நிறுவன அமைப்புக்கள் ரீதியான தீர்வுகள் அவசியமாகும். அவை வெறுமனே மாகாண அமைப்பு, அவற்றிற்கு அதிகாரப் பரவலாக்கல் என்று மட்டுமல்லாமல் மத்திய ஆட்சியமைப்பில் உரிய பங்குகளை வழங்குதல் இன மேலாதிக்கங்களைக் கட்டுப்படுத்தும் ஏற்பாடுகளை உருவாக்குதல் என அமைய வேண்டும்

4. அதிகாரப்பகிர்வுக்கான அரசியல் அலகு பற்றிய விடயத்தில், முஸ்லிம் மக்களுக்கென அவர்களின் கோரிக்கையின் அடிப்படையில் விசேடமான அரசியல் அதிகார அமைப்பு ஏற்பாடு செய்யப்படுதல் வேண்டும், கடந்த அறுபது ஆண்டுகளுக்கு மேலாக அரசின் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களால் ஏற்படுத்தப்பட்ட பாதகங்களுக்கு நியாயமானதொரு தீர்வு காணப்படும் வகையிலும், வடக்கு-கிழக்கு மாகாண தமிழர்களின் அரசியற் பாதுகாப்பை உத்தரவாதம் செய்யும் வகையில் தமிழர்களின் பாரம்பரிய வாழ்விடங்கள் தொடர்புடையதாகவம் ஒரே மாகாண எல்லைக்குள் இருக்கும் வகையிலும் மாகாண எல்லைகளை மீள் ஏற்பாடு செய்தல் வேண்டும்.

5. மாகாண அரசமைப்புக்கு அதிகாரங்களைப் பகிரும் விடயத்தில்,

1) பொதுவான நிலம், நில அபிவிருத்தி மற்றும் அரச நிலங்களின் மீதான அதிகாரம்;

2) சட்டம் மற்றும் ஒழுங்கை நிலைநாட்டும் விடயங்களில் அதிகாரம்;

3) கல்வி முன்னேற்றத்திற்கான ஏற்பாடுகள் மற்றும் அவற்றிக்கான நிறுவனங்கள் தொடர்பான அதிகாரங்கள;

4) அரச படைகளிலும், பொலிஸ் அமைப்புக்களிலும் மற்றும் அரச நிர்வாக சேவைகளிலும் சிறுபான்மை இனங்களின் சனத்தொகை விகிதாசாரங்களுக்குக் குறையாத அளவுக்கு ஆளணிகளைப் பேணுவதற்குரிய ஏற்பாடுகளை மேற்கொள்ளல்;

5) விரைவுபடுத்தப்பட்ட வகையில் வடக்கு கிழக்கில் புனர் நிர்மாணங்கள் மற்றும் புனரமைப்பு வேலைத் திட்டங்களை மேற்கொள்வதற்கான அதிகாரங்கள்;

6) விவசாயம், மீன்பிடி, கைத்தொழில்கள், சுற்றுலாத்துறை மற்றும் சேவைத் துறைகள் என பன்முகப்பட்ட பொருளாதார வளர்ச்சி நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கான அதிகாரங்கள்;

7) மக்களின் அடிப்படைத் தேவைகளான உணவு, உடை, உறையுள். மருத்துவம் ஆகியவற்றை உறுதிப்படுத்தவும் முன்னேற்றவுமான அதிகாரங்கள்;

8) நகர மீள் நிர்மாணங்கள், கிராம அபிவிருத்திகள், உள்ளாட்சி நிர்வாகங்கள் ஆகிய விடயங்களின் அதிகாரங்கள்;

9) போக்குவரத்து, மின்சாரம், தொலைத்தொடர்பு எனும் பொருளாதார அத்துடன் மனிதவள மற்றும் சமூக வளர்ச்சிகளுக்கான உட்கட்டமைப்புகள் மற்றும் நிறுவன அமைப்புக்களை கட்டியெழுப்புவற்கான அதிகாரங்கள்;

10) மொழி, சமய விடயங்கள், கலாச்சார விவகாரங்கள் மற்றும் தனித்துவமான சமூக பாரம்பரியங்கள் ஆகியவற்றை பாதுகாக்கவும் முன்னேற்றவுமான அதிகாரங்கள்;

மேற்படி விடயங்களில் அதிக பட்சமான, அநாவசியமான தலையீடுகளற்ற வகையில் அதிகாரங்கள் தமிழர்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட மாகாணத்துக்கு (தனி முஸ்லிம் மாகாணம் ஏற்படுத்தப்படும் பட்சத்தில் அதற்கும்) வழங்கப்படுதல் வேண்டும்

6. திரு. ஆனந்தசங்கரி அவர்கள் வெளிப்படுத்தி வரும் கருத்திற்கிணங்க இந்திய அரசியல் அமைப்பில் உள்ள அதிகாரப் பகிர்வு ஏற்பாடுகள் கருத்திற் கொள்ளப்படுதல் வேண்டும்.

7. திட்டவட்டமாக சமஷ்டி அமைப்பு முறை என ஆக்கிவிட்டால் அது பிரிவினைக்கு வழிவகுத்து விடுமோ என்ற அச்சத்தையும் (அது உண்மையல்ல அல்லது சரியற்றதெனினும்) இங்கு தற்காலிகமாகவேனும் கருத்திற் கொள்ள வேண்டி ஏற்பட்டிருப்பது தவிர்க்க முடியாததாகும். அது ஒன்றும் பெரிய தடையாகாது. இன்றுள்ள நிலையிருந்து ஒருபடி முன்னேற்றகரமான அரசியல் வளர்ச்சியை பெரும்பான்மையோரின் சம்மத்துடன் ஏற்படுத்துவதற்கு அது தவிர்க்கமுடியாதாயின் அதனை அங்கீகரிப்பது அவசியமாகும். எனினும் ஒற்றையாட்சி முறை என அரசியல்யாப்பை தொடர்ந்தும் வரையறுத்தால் அதிகாரங்களை உண்மையான முறையில் மாகாணங்களுக்குப் பகிர்வது சாத்தியமாகாது என்ற நிபுணர்களின் கருத்தும் அத்துடன் கடந்தகால அனுபவங்களும் இங்கு கருத்திற் கொள்ளப்படுதல் வேண்டும்.

8. அதிகாரப்பகிர்வு அர்த்தமுள்ளதாக அமைவதற்கும் செயற்படுவதற்கும் நிதி மூலங்களில் அதிகபட்ச அதிகாரப் பகிர்வுகளை மேற்கொள்வதோடு மத்தியில் குவியும் நிதி வளங்கள் நிபந்தனைகளின்றி போதிய அளவில் மாகாணங்களுக்கு பகிரப்படுவதற்கு சட்டபூர்வமான கட்டாய ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்

9. மாகாண ஆட்சிகளின் சுயாட்சி அம்சங்களைப் பாதுகாக்கும் விதமாகவும், மாகாண ஆட்சி அமைப்புக்கள் திறம்பட செயற்படவும், மத்திய ஆட்சிக்கும் மாகாண ஆட்சியமைப்புக்களுக்கு இடையேயும் முரண்பாடுகள் ஏற்படாமல் பராமரிப்பதற்கும், அநாவசியமான முறையில் மாகாண ஆட்சியமைப்புக்களை மத்திய ஆட்சியாளர்கள் இடையூறு பண்ணாமல் இருக்கும் வகையிலும் இரண்டு வகைப்பட்ட ஆட்சி அமைப்புக்களுக்கும் உரிய வரையறைகள் மேலும் அவற்றின் நிர்வாக மற்றும் சேவை அமைப்புக்களின் கட்டமைப்புக்களும் சட்ட வரையறை ஏற்பாடுகளும் அமைதல் வேண்டும்.

10. முழுமையான அல்லது எப்போதைக்குமான அரசியற் தீர்வானது ஒரே மூச்சிலான பாய்ச்சலில் நடைபெறமாட்டாது என்பது உலகரீதியான வரலாற்று அனுபவம். அரசியல் யாப்பு ரீதியான முன்னேற்றங்கள் படிப்படியாக ஏற்படுவதற்குரிய வகையில் ஒரு நெகிழ்வான அரசியல் யாப்பை உருவாக்குவதுவும், அதேவேளை பல தசாப்தங்களாக அரசியல் முரண்பாடுகளால் இழுத்துச் செல்லப்பட்டு துன்பங்களையும் இழப்புக்களையுமே கண்ட பரந்துபட்ட பொது மக்களுக்கு அவர்களின் வாழ்க்கையின் இருப்பின் மீதும் எதிர்காலம் பற்றியும் உறுதியான நம்பிக்கைகளை ஏற்படுத்தும் வகையிலும் அரசியல் அமைப்பில் அடிப்படையான மாற்றங்களையும் ஏற்பாடுகளையும் மேற்கொள்வதோடு

உடனடியாக பிரதானமாகவுள்ள அரசியல் சமூக சிக்கல்களுக்கு தீர்வு காண்பதுவும் இன்றைய காலகட்டத்தில் உள்ள அரசியற் தலைமைகளின் தேசிய மற்றும் சமூகக் கடமையாகும்.

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியானது அரசியல் சமூக விடயங்களை மக்கள் மத்தியில் செல்வாக்கை நிலைநிறுத்துவதற்கென்ற அடிப்படையிலோ அல்லது பிரபலமான போக்குகளோடு இணைந்து போனால்தான் நிலைக்கலாம் என்றோ நோக்குவதில்லை. மாறாக, எப்போதும் பரந்துபட்ட மக்களின் நலன்களிலிருந்து, அரசியல் மற்றும் சமூக நிலைமைகளில் ஏற்படும் மாற்றங்களைக் கருத்திற் கொள்வதற்குத் தயங்காமல் உண்மைகளோடும் சரியானவற்றோடும் நியாயமானவைகளோடும் சார்ந்து நிற்பதுதான் ஈழ மக்கள் புரட்சிகர முன்னணியின் கடந்த காலம், நிகழ்காலமும் என்பதை அதன் வரலாற்றை நோக்குபவர்களால் புரிந்து கொள்ள முடியும். இங்கு முன் வைக்கப்பட்டுள்ள பிரேரணைகளும் கூட இலங்கை மக்கள் அனைவரினதும் முன்னேற்றகரமான எதிர்காலத்துக்கு உரிய சரியான பாதையொன்றை உருவாக்குவதற்கான அதன் வரலாற்றுப் பங்கே.

இலங்கையின் இனமுரண்பாட்டைத் தீர்ப்பதற்கு இலங்கையின் பிரதானமான சிங்களத்தலைவர்களும், பெரும்பான்மையான தமிழ் மற்றும் முஸ்லிம் தலைமைகளும் இந்தியா உட்பட சர்வதேச சமூகமும் அங்கீகரித்து ஆதரவளிக்கக் கூடியதோர் அரசியற் தீர்வுப் பெட்டகத்தை உருவாக்கி அவற்றை நாட்டின் அரசியற் சட்டமாக்குவதே அரசின் முதற் கடமையாகும். அதனை எப்படி களத்தில் மக்கள் மத்தியில் நடைமுறைப்படுத்துவது என்பது இரண்டாம் கட்ட விடயமாகும். இங்கு குறிப்பிட்டுள்ள சக்திகள் ஒருமுகப்பட்டு ஒத்துழைத்தால் அதன் வெற்றியை, முன்னேற்றத்தை எந்த அதிதீவிரவாத மற்றும் பயங்கரவாத சக்திகளாலும் தடுத்துவிட முடியாது.

மேற்குறிப்பிடப்பட்டுள்ள அனைத்துப்பிரிவினரும் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் முன்மொழிவுகளையும் அவற்றின் தர்ம நியாயங்களையும், காலத்தோடு கொண்ட பொருத்தப்பாடுகளையும் அக்கறையோடு கருத்திற்கொண்டு அங்கீகரிப்பார்கள் என நாம் நம்பிக்கையோடுள்ளோம்.

செழிப்பான, பலமான, ஒற்றுமையான இலங்கையைக் கட்டியெழுப்புதற்கு அவசியமானவைகளாக உள்ள - அரசியல் நீதியின் அடிப்படையிலான நிரந்தர சமாதானம், உண்மையான மக்களாட்சியை நோக்கிய ஜனநாயக விரிவாக்கம், பல்லினங்களுக்கிடையில் சமத்துவ அடிப்படையிலான சகோதரத்துவத்தின் வளர்ச்சி என்னும் - அடித்தளங்களை இடும் முயற்சியில் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் இந்த முன்மொழிவுகள் ஒரு வரலாற்றுப் பாத்திரத்தை வகிக்கும் என்ற எதிர்பார்க்கையோடு, பேராசிரியர் திஸ்ஸ விதாரண அவர்களின் ஊடாக இவ்வறிக்கையை அரசியற் தீர்வு யாப்பு பிரேரணையொன்றை உருவாக்குதில் ஈடுபட்டுள்ள அனைத்துக் கட்சிகளினது பிரதிநிதிகள் மற்றும் அரசியல்யாப்பு வரைவு நிபுணர்கள் ஆகியோரது கவனத்துக்கும் கருத்துக்கும் சமர்ப்பிக்கின்றோம்.

**ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி**

மார்ச் 2007

# இனப்பிரச்னையின் அரசியல் தீர்வுக்கான ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (பத்மநாபா) முன்வைத்துள்ள பிரேரணைகள்

01. இலங்கையானது **"இலங்கை ஐக்கிய ஜனநாயக குடியரசு"** எனும் வகையாக ஸ்தாபிக்கப்பட வேண்டும்.

- இவ் **"இலங்கை ஐக்கிய ஜனநாயக குடியரசு",** இந்நாட்டில் வாழும் பல்வேறு சமூகங்களினது அபிலாஷைகளை முழுமையாக உள்ளடக்கி அவற்றைப் பேணிப்பாதுகாப்பதுடன், நாட்டின் ஐக்கியத்தையும் இறைமையையும் மேம்படுத்துவதற்கு ஏதுவாகவும், சமஷ்டி, ஜனநாயகம், மனித உரிமைகள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டதாகவும் அமைக்கப்பட வேண்டும்.
- இவ் **ஐக்கியக் குடியரசில்,** அனைத்து மாகாணங்களிலும் வாழும் பிரைஜைகளின் நியாயமான விருப்புக்களையும், அவர்களது அடிப.படை அபிலாஷைகளையும் கவனத்தில் கொண்டு, அவற்றைப் பேணிவளர்ப்பதற்கும், அம் மாகாணங்களின் சகல சமூகங்களிடையே சமாதானம், சமத்துவம், சகோரத்துவம் நிலவவும், அவர்களது உயிர், உடமைகள் ஆகியவற்றைக் பாதுகாக்கும் வகையில் ஒவ்வொரு மாகாணத்திலும் மாநில அரசுகள் உருவாக்கப்பட வேண்டும்.
- தேசிய நலன்களைப் பாதுகாப்பதற்கு ஏதுவாகவும், நாட்டின் இறைமை, ஒருமைப்பாடு ஆகியவற்றை பேணுவதற்கும் சகல சமூகத்தினரது முன்னேற்றத்தை முன்னெடுத்துச் செல்லும் வகையிலும், இப் பிராந்திய அரசுகள் அதிகாரங்களையும் செயற்பாடுகளையும் கொண்டிருக்கும். எவ்வாறெனினும் அவை இலங்கை குடியரசிலிருந்து பிரிக்க முடியாதவையாகவும், ஐக்கிய அரசுடன் நன்கு ஒருங்கிணைக்கப்பட்டவையாகவும் அமைந்திருக்கும்.
- நாட்டின் அரசியல் யாப்பே ஜனநாயகம், சமஷ்டி ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட அரசியல் கட்டமைப்பையும், சட்டத்தின் ஆட்சியையும் மக்களது அடிப்படை உரிமைகளையும் உறுதிப்படுத்துகின்ற அதி உயர் சட்டமாகும். அது தான், சட்டவாக்கல் மற்றும் நிறைவேற்று அதிகாரங்கள், நாட்டின் மத்திய-மாநில அரசுகளுக்கு இடையேயான உறவுகள் மற்றும் கட்டுப்பாடுகள் போன்றனவற்றை வரையறுப்பதாகவும் அமைய வேண்டும்.

**குறிப்பு** :- அரசியல் யாப்பை உருவாக்குபவர்கள் பிராந்திய அரசுகளுக்கு அதிகூடியபட்ச அதிகாரப் பகிர்ந்தளிப்பை மேற்கொள்வதற்கு அவசியமான அடிப்படைகளை அரசியல் யாப்பு கொண்டிருக்க வேண்டும். அதற்கு ஏதுவாக "சமஷ்டி" என்ற பதத்தை உள்ளடக்குவதில் சிரமங்களிருப்பின் அதற்கான உடனடி மாற்று ஏற்பாடாக "ஒற்றையாட்சி" என்ற பதம் அரசியல் யாப்பில் இடம்பெறாதிருக்க வகை செய்தல் வேண்டும்.

## 02. மத்தியிலும், மாநிலங்களிலும் பெரும்பான்மை மேலாதிக்கம் இல்லாதிருக்கச் செய்தல்

a. புதிய அரசியல் யாப்பு எந்த சட்டவாக்க நிறுவனங்களிலும் -அதாவது நாடாளுமன்றத்திலோ அல்லது மாநில சட்டசபையிலோ - ஒரு தனிப்பட்ட அரசியல்

கட்சியோ அல்லது ஒரு தேசிய சமூகமோ “மூன்றில் இரண்டு பெரும்பான்மை” அதிகாரம் மூலம், மேலாண்மை செலுத்தாதவாறு அரசியல் அமைப்பில் ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும்.

b. தொகுதிகளை மீள் வரையறை செய்தல் மூலமாகவோ, அல்லது இனப் பிரதி நிதித்துவத்துகென ஒதுக்கப்பட்ட தொகுதிகள் அல்லது பல்அங்கத்தினர்- தொகுதிகளை உருவாக்குதல் என்ற ஏற்பாடுகள் மூலம், தேசிய சிறுபான்மை சமூகங்களினால் தேர்ந்தெடுக்கப்படும் பிரதிநிதிகள் மொத்த எண்ணிக்கையானது நாடாளுமன்றத்தின் மொத்த உறுப்பினர் எண்ணிக்கையில் மூன்றில் ஒரு பங்கிற்கு குறையாது இடம் பெறும் வகையில் அரசியல் யாப்பில் ஏற்பாடு செய்யப்படுதல் வேண்டும்.

## 03. தேசிய சமூகங்களின் பேரவை - ஈரவை நாடாளுமன்றம்

தற்போதைய இலங்கையின் சமூக உருவாக்கத்தில முனைப்படைந்து நிற்கும் அம்சங்கள் மற்றும் நிலவும் அரசியல் உறவுகளின் நிலைமைகள் காரணமாக, ஜனநாயகத்தில் நம்பிக்கை கொண்ட யாவருமே இரண்டாவது அவையை உள்ளடக்கிய ஈரவை நாடாளுமன்ற அமைப்பு முறையை பெருமளவில் விவாதத்திற்கு அப்பால் ஒப்புக்கொள்கின்றனர். அனைத்து தேசிய சமூகங்களிடையே சமத்துவத்தைப் பேணிப் பாதுகாப்பதற்கும், நாட்டின் ஒரு குறிப்பிட்ட சமூகத்தின் பெரும்பான்மை வாய்ப்பினாலோ, அரசோச்சும் ஓர் அதிகார ஸ்தாபனத்தாலோ சட்டவாக்கம் மற்றும் நிறைவேற்று அதிகார நடைமுறைகளில் எந்தவொரு சமூகத்தினதும் அடிப்படை உரிமைகளுக்கும், நலன்களுக்கும் பங்கமேற்படாமல் இருப்பதற்கும் இந்த ஈரவை முறையானது அவசியமெனக் கருதப்படுகிறது.

**“தேசிய சமூகங்களின் பேரவை”** என இவ் இரண்டாவது அவை அழைக்கப்படலாம். இங்கு பின்வரும் விடயங்கள் கருத்திற் கொள்ளப்படுதல் வேண்டும்:

a) சிங்களவர்கள், தமிழர்கள், முஸ்லீம்கள், மலையகத் தமிழர்கள் ஆகியோர் இலங்கையின் தேசிய சமூகத்தினர் ஆவர்

b) இப் பேரவையின் மொத்த உறுப்பினர் எண்ணிக்கையில் தேசிய சிறுபான்மை சமூகங்களைப் பிரதிநிதித்துவப்படுத்துவோரின் மொத்த எண்ணிக்கையானது 40 சதவீதத்துக்கு குறையாமல் இருக்க அரசியல் யாப்பில் வகை செய்தல் வேண்டும்.

c) இப் பேரவையின் பிரதிநிதித்துவக் கட்டமைப்பானது மாநில சட்டமன்றங்களை மட்டுமன்றி பிரதேசசபைகள், தொழிற்சங்கங்கள், பல்கலைகழகப் பட்டதாரிகள் மற்றும் மாணவர்கள், கல்விமான்கள், தொழிலதிபர்கள், தொழில் வல்லுனர்கள், மற்றும் ஏனைய வகையான தேசிய முக்கியத்துவமுடையோரை பிரதிநிதித்துவம் செய்வதாக அமைதல் வேண்டும்.

d) இப்பேரவையானது, இரண்டாவது சபைக்கென பாரம்பரியமாக உரிய நடவடிக்கைகளுடன், நாட்டில் வாழும் சகல தேசிய சமூகங்களினது அடிப்படை அபிலாஷைகளையும், நலன்களையும் பாதுகாப்பதே அதன் பிரதான செயற்பாடாகவும் பொறுப்பாகவும் அமைய வேண்டும்.

e) உப ஜனாதிபதியோ, அல்லது ஜனாதிபதியால் நியமிக்கப்படும் சிவில் சேவையில் உயர் உத்தியோகத்தில் மேன்மையாகப் பணியாற்றிய அனுபவமும் கொண்ட இளைப்பாறியவர் போன்ற ஒருவரோ இப்பேரவையின் தலைவராக ஆகுதல் வேண்டும்.

f) நாடாளுமன்ற மக்களவையிலோ அல்லது மாநில சட்ட சபையிலோ கொண்டுவரப்படும் ஒரு தீர்மானம் அல்லது சட்டப் பிரேரணை, ஒரு குறிப்பிட்ட தேசிய சமூகத்தின் பிரதிநிதிகளில் 50 வீதமானோர் அல்லது அதற்கு மேற்பட்டவர்களால் ஒப்புக்கொள்ளப்படாவிட்டால், இத் தீர்மானமோ அல்லது சட்டப்பிரேரணையோ முதலில்

ஏற்றமுறையில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு இரண்டாவது அவையின் பெரும்பான்மையான உறுப்பினர்களின் அங்கீகாரமும் பெறப்பட்டே நிறைவேற்றப்பட வேண்டும்.

g) சிறுபான்மை சமூகங்களின் அபிலாசைகள், நலன்கள் தொடர்பான ஏதாவது முக்கியமான திருத்தங்கள் அரசியல் யாப்பில் கொண்டுவரப்படுவதாக இருந்தால், இந்த அவையின் பிரநிதித்துவத்திலும் மூன்றில் இரண்டு பங்கினரின் அங்கீகாரம் பெறப்பட வேண்டும்.

h) இதேபோன்ற ஒழுங்குகள், எங்கெல்லாம் தேவையெனக் கருதப்படுகின்றதோ, அந்த மாநில அரசமைப்புகளிலும் ஏற்படுத்தப்பட வேண்டும்.

## 04. குடியரசின் ஜனாதிபதியும், பிரதம மந்திரியும்

a) மக்களால் தெரிவுசெய்யப்படும் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியின் தேர்வு முறை தொடரப்பட வேண்டும். எனினும், ஜனாதிபதியின் பிரத்தியேக நிறைவேற்று அதிகாரங்கள் அரசியல் யாப்பினால் கட்டுப்படுத்தப்பட வேண்டும்.

b) (1) தேசிய பாதுகாப்பு (2) மாநில அரசமைப்புகள் சம்பந்தமான விடயங்கள் (3) வெளிநாட்டு விவகாரங்கள் (4) மத்தியவங்கி, தேசிய கருவூலம் போன்ற விடயங்களின் நிறைவேற்று அதிகாரங்களை ஜனாதிபதி கொண்டிருப்பார். மற்றைய சகல துறைகளுக்குமான மந்திரிகளை, பிரதம மந்திரியின் பிரேரிப்பின்படியே ஜனாதிபதி நியமித்தலும் விலக்குதலும் வேண்டும்.

c) மத்திய பொலிஸ் திணைக்களம், பிரதம மந்திரியின் அலுவலகத்துக்குக் கீழேயே செயல்படும்.

d) தன்னுடைய நேரடி அதிகாரத்திற்கு உட்பட்ட விடயங்களைத் தவிர மத்திய அரசாங்கத்தின் மற்றைய விடயங்கள் மீது பிரதம மந்திரியினது அல்லது மத்திய மந்திரி சபையினது அறிவுரைகளின் படியே ஜனாதிபதி தனது நிறைவேற்று அதிகாரங்களை பிரயோகிக்கலாம்.

e) ஜனாதிபதியும் பாராளுமன்றத்திற்கு பதிலளிப்பவராகவும் கணக்கு காட்டுபவராகவும் இருக்க வேண்டும்.

f) ஜனாதிபதியும், பிரதம மந்திரியும், மந்திரி சபையும், மத்திய மந்திரிகளின் சகல செயல்களுக்கும் ஒட்டுமொத்த பொதுப் பொறுப்புடையவர்களாவர்

g) வெளிநாடுகளுடன் ஏற்படுத்தப்படும் சகல ஒப்பந்தங்களும் இணக்கப்பாடுகளும் நாடாளுமன்றத்தினால் ஒப்புதல் அளித்த பின்னரே சட்டபூர்வமானதாகவும் நிறைவேற்றுதலுக்கு உரியதாகவும் கொள்ளப்படும்.

h) அரசியல் யாப்பில் பிரத்தியேகமாக குறிப்பிடப்பட்டிருக்கும் காரணங்களுக்காகத் தவிர, பிரதம மந்திரி பாராளுமன்றத்தில் பெரும்பான்மையை கொண்டிருக்கும் வரை, மறுதேர்தலுக்கு ஆறு மாதங்களுக்கு முன்னர் பாராளுமன்றத்தை ஜனாதிபதி கலைக்க முடியாது.

## 05. உப ஜனாதிபதி

i. உப ஜனாதிபதி, ஜனாதிபதி சாராத தேசிய சமூகமொன்றினைச் சேர்ந்தவராக இருக்க வேண்டும்.

ii. ஜனாதிபதி வேட்பாளருடன் இணைந்து போட்டியிட்டு மக்களால் தெரிவு செய்யப்படுவதன் மூலமாகவோ அல்லது அரசியல் யாப்பின் பிரகாரம் மாநில சட்ட மன்றங்கள் மற்றும் பிரதேச சபைகளின் உறுப்பினர்களாலோ உப ஜனாதிபதி தெரிவுசெய்யப்படலாம்.

இரண்டாவது வழிமுறை பின்பற்றப்பட்டால் அதில் தேசிய சிறுபான்மை இனங்களின் பிரதிநிதிகளின் வாக்குகளுக்கு மேலதிக மதிப்பு அளிக்கப்படுதல் வேண்டும்.

iii. உப ஜனாதிபதி, நாடாளுமன்றத்தின் இரண்டாவது அவைக்கும் தேசிய பொருளாதார திட்டமிடல் மற்றும் நிதி ஆணைக்குழுவிற்கும் தலைமை தாங்குவார்.

### 06. இன மத சார்பற்ற அரசை நிறுவுதல்

இலங்கை பல்லின பல்மத, பல்கலாச்சாரங்களைக் கொண்ட நாடு. இலங்கையின் அரசியல் யாப்பு, நாட்டின் ஏனைய மதங்களிலும் மற்றைய நம்பிக்கை முறைமைகளிலும் பார்க்க ஒரு குறிப்பிட்ட மதத்தை மேலானதாக கருதக் கூடாது. சகல சமய சமூகங்களிடையே பரஸ்பர நம்பிக்கைக்கும் நல்லிணக்கத்திற்கும் வழிசமைப்பதாக அரசியல் யாப்பு ஒழுங்குகள் இருத்தல் வேண்டும். அரசாங்கம், சகல மதப் பிரிவுகளுடனும் எந்தவித சார்பற்றதாகவும், முழுமையாக நடுநிலைமை வகிப்பதாகவும் இருக்கின்றமை அதன் உள்ளார்ந்த எண்ணங்களிலும் செயல்முறைகளிலும் புலப்பட வேண்டும். நம்பிக்கைகள், உண்மைகள், அறிவு என்பன உலகளாவியவை - அவை தேசிய அல்லது , பிராந்திய எல்லைகளைக் கொண்டவையல்ல - என்பதினால் இவ்விடயத்தில், வெவ்வேறு நம்பிக்கைகள் கொண்டோரினது அடிப்படை நலன்கள், அபிலாசைகள் ஆகியவற்றை சமமாகப் பாதுகாப்பதே பராமரிப்பதே அரசின் கடமையாகும்.

## மாநில ஆட்சியமைப்பு

### 07. மாநில அரசுகளின் நிலப்பரப்பு (அதிகாரப் பகிர்வுக்கான அலகு)

தமிழ் மக்கள் தமது வாழ்வை சொத்துக்களை பாதுகாப்பதற்கும், தம் அரசியல், பொருளாதார, சமூக இருப்பைப் பேணுதற்காகவுமே ஒருங்கிணைந்த வடக்கு, கிழக்கு மாகாணத்தைக் கோருகின்றனர். நீண்ட காலமான இன பாரபட்சங்களும், தொடர்ந்து நடாத்தப்படும் போரினால் ஏற்படுத்தப்பட்ட துன்பங்களுமே தமிழர்களிடையே பாதுகாப்பற்ற உணர்வை அதிகப்படுத்தியுள்ளது. எங்களுடைய பார்வையில், தமிழர்களில் அதிக பெரும்பான்மையோர் ஒரு நிலையானதும், பாதுகாப்பானதுமான வாழ்விற்கான ஆவலும், ஆர்வமும் கொண்டிருக்கிறார்கள். ஒருங்கிணைந்த வடக்கு-கிழக்கை மாநிலத்தை ஏற்படுத்துவதன் மூலம் அவற்றினை அவர்களுக்கு அளிப்பதோடு, இதன் மூலமே இலங்கையின் சகல மக்களும், ஒரு பலமான ஐக்கிய இலங்கை என்ற தேசத்தைக் கட்டியெழுப்பும் வேலைத்திட்டங்களில் செயலாற்ற முடியும்.

எனினும், வடக்கு, கிழக்கில் வாழும் முஸ்லீம், சிங்கள மக்களிடையே இருக்கும் நியாயமான அச்சம், பயம் ஆகியவற்றை கருத்திற்கொண்டு, அவை தொடர்பாக ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி பின்வரும் வழிமுறைகளை முன்மொழிகிறது - இது அம்பாறை, திருகோணமலை ஆகிய மாவட்டங்களின் மாகாண எல்லைகளில் சில மாற்றங்கள் செய்தல், தற்போதுள்ள அம்பாறை தேர்தல் பிரிவை அருகாமையில் அமைந்திருக்கும ஊவா மாகாணத்துடன் இணைக்கும் சாத்தியக்கூறுகளை நோக்குதல் ஆகியவற்றை உள்ளடக்கிய வழிமுறைகளாகும். இவ் விடயத்தின் போது, வெலிஓயா திட்டம் சம்பந்தமான பிரச்சனைகளையும் கவனத்தில் கொண்டு வேண்டியவற்றைச் செய்வது அவசியமாகும்.

#### 7a. முஸ்லீம் மக்களின் கோரிக்கைகள் தொடர்பான அரசியல் ஏற்பாடுகள்

மத்திய அரசிலோ அல்லது மாகாண ஆட்சி அமைப்புக்களிலோ தங்களது அபிலாஷைகளைப் பேணுவதற்கான வாய்ப்புக்கள் கடந்த காலத்தில் மேற்கொள்ளப்பட்ட

அரசியல் அதிகாரப் பகிர்வில் வழங்கப்படவில்லை என்ற நியாயமானதொரு ஏக்கம் முஸ்லிம் சமூகத்தினரிடையே பரவலாக நிலவுகிறது. மேலும், கடந்தகாலங்களில் புலிகள் அமைப்பினால் முஸ்லிம் மக்கள் மீது செலுத்தப்பட்ட கொடுமைகளும், இனச் சுத்திகரிப்பு நடவடிக்கைகளும் அவர்களுடைய கவலைகளை அதிகப்படுத்தியிருப்பதனால் நிலைத்து நிற்கக்கூடிய ஓர் அரசியல் முறைமை தங்களுக்கும் வேண்டும் என்று அவர்கள் கோருவது இன்றியமையாததாக ஆகியுள்ளது.

முஸ்லீம் மக்கள் கணிசமான அதிக எண்ணிக்கையில் வாழும் கிழக்கில் முஸ்லிம் மக்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட பகுதிகளை மையமாகக் கொண்டதொரு நடைமுறைச் சாத்தியமான அரசியல் வடிவமைப்பை உருவாக்குவதே சாரியானதாக அமையும். இது சமூகங்களிடையே தற்போது நிலவும் - எதிர்பார்க்கப்படும் பரஸ்பர அச்சங்களைக் கருத்திற்கொண்டு அவற்றை நிவர்த்தி செய்வதற்கான அரசியல் ஏற்பாடுகளை உருவாக்குவதன் மூலம் சமூகங்களிடையே ஒற்றுமையையும் சமாதானத்தையும் ஏற்படுத்தும் நோக்கம் கொண்டதாகும். வடக்கு - கிழக்கைப் பிரிப்பதற்கான முஸ்லிம் மக்களின் கோரிக்கையல்ல எனக் கொள்ளப்படுதல் வேண்டும்.

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி முஸ்லீம் மக்களின் கவனத்திற்கு பின்வருவனவற்றை முன்மொழிகிறது-

**வழிமுறை 1.**

அம்பாறை மாவட்டம் தென்-கிழக்கு மாகாணமாக முஸ்லீம் மக்களுக்கான புதிய மாகாணமாக மீள்வரையறுக்கப்படல் வேண்டும். இவ்வேளையில், மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்களும் வடமாகாணமும் சேர்ந்த தனியான ஒருங்கிணைந்த வடக்கு-கிழக்கு மாகாணமாக அமையும். இதன் போது, பின்வருவன கவனத்தில் கொள்ளப்படுதல் வேண்டும்.

(அ) அம்பாறை தேர்தல் பிரிவு (தொகுதி) ஊவா மாகாணத்துடன் இணைவது குறித்து தீர்மானிக்கும் உரிமை வழங்கப்படுதல் வேண்டும். இதன் மூலம் அந்த மாகாணத்தில் கணிசமாக உள்ள சிங்கள மக்கள் தாம் சிறுபான்மையினர் என்ற உணர்வை நீக்க முடியும்

(ஆ) தென்-கிழக்கு மாகாணத்தில் தமிழர் பெரும்பான்மையாக உள்ள பிரதேச சபைகள் குறித்து முஸ்லீம் தலைவர்கள் எவ்வாறான ஏற்பாடுகளை முன்மொழிவார்களோ, அவை புதிய வடக்கு-கிழக்கு மாகாணத்திலுள்ள முஸ்லீம்கள் பெரும்பான்மையாகவுள்ள பிரதேச சபை பகுதிகளிலும் ஏற்படுத்தப்பட வேண்டும்.

**வழிமுறை 2**

அத் தென்கிழக்கு மாகாணம், தொடர்பற்ற முஸ்லிம் பகுதிகளான காத்தான்குடி, ஏறாவூர் நகரம், வாழைச்சேனை நகரம், கிண்ணியா, மூதூர், எருக்கலம்பிட்டி ஆகிய பிரதேச சபைகளின் பகுதிகளுடன் நிர்வாக ரீதியாக இணைக்கப்படலாம். (இந்தியாவிலுள்ள பாண்டிச்சேரி அரசு போன்றது)

இத்தகைய வடிவமைப்பில், அதே ஒழுங்குகள் இணைந்த புதிய வடக்கு- கிழக்கு மாகாணம் சம்பந்தப்பட்டவரையில் தென்-கிழக்கு மாகாணத்திலுள்ள தமிழர் பெரும்பான்மையாகவுள்ள பிரதேசங்களுக்குப் பொருந்தும்.

அம்பாறை மாவட்டத்தில் பின்வரும் தொடர்ச்சியற்ற தமிழ்ப் பிரதேச சபை பகுதிகள் இருக்கின்றன என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

1. கல்முனை வடக்கு ( தமிழ் ) பிரதேச சபை
2. காரைதீவு பிரதேச சபை
3. ஆலையடிவேம்பு பிரதேச சபை
4. தம்பிலுவில் - திருக்கோவில் பிரதேச சபை

**வழிமுறை 3.**

இணைந்த வடக்கு-கிழக்கு மாகாணத்திற்குள் உள்ள முஸ்லீம் மக்களின் நலன்களைப் பேணுவதற்கான தனியான சபை ஒன்றினைத் தோற்றுவித்து அதற்கென குறிப்பிட்ட துறைகளில் அதிகாரங்களினை பகிர்ந்தளிப்பது. இவ்வாறான முஸ்லிம் மக்கள் சபையானது முஸ்லீம் மக்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட பிரதேச சபை பகுதிகளில் அவ்வதிகாரங்களை செயற்படுத்துவதில் பொறுப்பு வகிக்கும்.

மேற்குறிப்பிட்டவற்றில் எந்த வழிமுறை தமது சமூகத்துக்குப் பொருத்தமானது என்பதை வடக்கு - கிழக்கிலுள்ள முஸ்லீம் மக்களும், அதன் தலைவர்களுமே தீர்மானித்தல் வேண்டும்.

தொடர்ச்சியற்றுக் காணப்படும் தமிழர்கள், முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழும் பிரதேசங்கள் சம்பந்தப்பட்ட பரஸ்பர ஒழுங்குகளையும், அதற்கான பொருத்தமான பொறிமுறை விபரங்களையும், தமிழ்-முஸ்லீம் தலைவர்கள் பேச்சுவார்த்தை மூலம் வகுத்துக் கொள்ள வேண்டும். அதேவேளை, ஏனைய சமூகத்தின் பிரதேசத்திற்குள் அடங்கும் இன்னொரு சமூகத்தின் விவசாய நிலம் பற்றிய எதிர்கால ஒழுங்குகள் பற்றியும் பேச்சுவார்த்தைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

தேசிய சிறுபான்மை சமூகங்களின் அடிப்படை ஜனநாயக அபிலாஷைகளையும் நலன்களையும் பேணுவதற்கு அனுகூலமாக, மாகாணங்களின் எல்லைகள் மீள் வரையறுக்கப்பட வேண்டுவது அத்தியாவசியமானது என பல்வேறு அரசியல் அமைப்புகள் மத்தியில் பொதுவான எண்ணம் இருக்கிறது.

### 7b மாகாணங்களின் நிலப்பகுதிகளை மீள்வரையறை செய்தல்

வடக்கு, கிழக்கு மாகாணங்களின் இணைப்புத் தொடர்பாக மக்களின் கருத்துக்கணிப்பு பெறப்படவேண்டுமென முன்னர் பிரேரிக்கப்பட்டவற்றில் கூறப்பட்டமை பல்வேறு சமூகங்களிடையே நிலவும் பிரிவையும் பகைமையையும் மேலும் ஆழமாக்கும் என்பதில் சந்தேகமில்லை. இத்தகைய கருத்துக்கணிப்பு பல பக்கங்களிலும் காணப்படும் தீவிர இனவாத சக்திகள் பதட்டங்களையும் அச்சங்களையும் மேலும் கிளறிவிட உதவுவதாகவே அமைந்துவிடும்.

மாகாண எல்லைகள் என்பது முன்னைய காலனித்துவ ஆட்சியாளர்களால் நிர்வாக வசதிக்காக வரையறுக்கப்பட்ட பூகோளப் பகுதிகளேயாகுமாதலால் அவற்றில் புனிதம் எதுவுமில்லை. இந்த எல்லைகளுக்கு, 1987ல் ஏற்படுத்தப்பட்ட அரசியல் அமைப்பின் 13வது திருத்தத்தின் மூலந்தான் அரசியல் அங்கீகாரம் அளிக்கப்பட்டது.

1957ம் ஆண்டின் பண்டா-செல்வா ஒப்பந்தமும், 1965ன் டட்லி-செல்வா ஒப்பந்தமும் அரச உதவிகளுடன் ஏற்படுத்தப்பட்ட குடியேற்றங்களால் உருவாகிய இனங்களுக்கிடையேயான பதட்டங்களைத் தணிப்பவையாக கருதப்பட்டவை என்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். இவ் ஒப்பந்தங்கள் அப்போது அமுலாக்கப்பட்டிருப்பின், வடக்கு-கிழக்கைப் பிரிப்பதா அல்லது இணைப்பதா என்ற கேள்வி எழுந்திருக்காது. இணைந்த வடக்கு –கிழக்கு

இணைப்பு, திட்டமிட்ட அரச குடியேற்ற நடவடிக்கைகளின் விளைவுகளைச் சமன் செய்வதற்காக எழுந்த கோரிக்கையாகும்.

இனப்பிரச்னையைத் தீர்ப்பதற்கு, 1970 களிலிருந்து அரசினால் உருவாக்கப்பட்ட குடியேற்றத் திட்டங்களை நீக்குவதாக திருமதி. சிறீமா பண்டாரநாயக்காவும் 1988ம் ஆண்டில் தனது ஜனாதிபதி தேர்தல் விஞ்ஞாபனத்தில் உறுதியளித்திருந்தார்.

**7b1.** **அம்பாறை தேர்தல் பிரிவை ஏனைய மாகாணங்களுடன் சேர்த்தல்**

வடக்கு–கிழக்கு மாகாணத்திலிருந்து அம்பாறை தேர்தல் பிரிவை தனியாக்கி, அதனை அம்பாறை தேர்தல் பிரிவின் பொலீஸ், நீதிமன்ற நிர்வாகம் என்பனவற்றைத் தற்போது கவனித்துவரும் ஊவா மாகாணத்துடன் இணைக்கும்படி ஈழ மக்கள் பரட்சிகர விடுதலை முன்னணி அபிப்பிராயப்படுகிறது.

இந்த யோசனைக்கான அடிப்படைக் காரணம், அம்பாறை தேர்தல் பிரிவிலுள்ள சனத்தொகையில் பெரும்பாலானோரை, பதட்டங்களை ஏற்படுத்தி தமிழ், முஸ்லிம் மக்களின் அடிப்படை அரசியல் இருப்பை நலிவாக்குதற்கு ஒரு கருவியாக உபயோகிக்கப்படுவதைத் தவிர, அவர்கள் அம்பாறை மாவட்டத்திலுள்ள ஏனைய தொகுதிகளிலுள்ள மக்களோடு ஓர் அர்த்தமுள்ள சமூக, அரசியல் உறவைக் கொண்டிருக்கவில்லை.

**7b2.** **வெலிஓயா திட்டத்தினை மீள்வடிவமைத்தல்**

a) முல்லைத்தீவு, திருகோணமலை மாவட்டங்களின் உள்ளே அமைந்திருக்கும் வெலிஓயா திட்டத்தின் நிலப்பகுதியை மீள்வடிவமைத்து அதன் மூலம் முன்னைய தமிழ்க் கிராமங்கள் 1984க்கு முன்னர் இருந்த நிலைமைக்கு மீளவும் கொண்டுவரப்பட்டு, அரச நிலங்கள் அந்தந்த மாவட்டங்களில் நிலவிய இனவிகிதாசாரப்படி மக்களுக்கு பகிர்ந்தளிக்கபட வேண்டும்.

b) தங்களது முன்னைய கிராமங்களில் நிலமோ, வீடோ இல்லாமல், உண்மையாகவே குடியேறி 10 வருடங்களுக்கு மேலாக நிரந்தரமாக வதியும் சிங்கள விவசாயக் குடும்பங்கள் தெரிவுசெய்யப்பட்டு அவர்கள் தொடர்ந்து வாழ்வது ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும்.

**7b3.** **திருகோணமலை எல்லைக் கிராமங்களை மறுவடிவமைத்தல்**

அரசின் திட்டமிட்ட குடியேற்றங்கள் இனக் குழுமங்களின் விகிதங்களை திருகோணமலையிலும் வெகுவாகப் பாதித்துள்ளது. 1950-60 களில் அல்லை-கந்தளாய் பகுதிகள் முழுவதுமே பெருமளவில் சிங்களப் பகுதிகளாக மாற்றப்பட்டதன் மூலம் திருகோணமலை மாவட்டத்தில் 1976 இல் சேருவாவில தேர்தல் தொகுதி உருவாக்கப்பட்டது. 1960 களிலும், 1970 களிலும் திருகோணமலை நகரிலும் அதனைச் சார்ந்த பகுதிகளிலும் சிங்களக் குடியேற்றங்கள் விஸ்தரிக்கப்பட்டன.

எனினும், இப் பகுதிகளில் தற்போது வாழும் சிங்கள மக்களின் இயல்பு வாழ்க்கையைக் குலைக்கும் எதுவித நடவடிக்கைகளையும் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி கோரப்போவதில்லை. ஆனாலும், நிலமைகளைச் சீர்செய்யும் முகமாக ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி கீழ்க்கண்டவற்றை முன்மொழிகிறது.

திருகோணமலை, பொலநறுவை மாவட்டங்களின் எல்லைப் பிரிவுகளில் அமைந்திருக்கும் சிங்கள மக்கள் பெரும்பான்மையாக வாழும் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளும், கிராம சேவகர் பிரிவுகளும் அடையாளம் காணப்பட்டு அவை வட-மத்திய மாகாணத்துடன் இணைக்கப்படுதல் வேண்டும். அதே வேளையில், இப்படியான மீள்வடிவமைப்பு வவுனியா முதல் திருகோணமலையினதும், திருகோணமலை முதல் மட்டக்களப்பினதும் வடக்கு – கிழக்கு மாகாணத்தின் தொடர்ச்சியைப் பாதிக்காதிருப்பது உறுதிப்படல் வேண்டும்.

**7b4.** **கிழக்கின் எதிர்காலம்**

ஒருங்கிணைந்த வடக்கு – கிழக்கு மாகாணக் கோரிக்கைக்கான அடிப்படை காரணம், இப் பிரதேசத்து மக்கள் யாவரும், குறிப்பாக தமிழ் மக்கள், தாங்கள் காலாகாலமாக வாழ்ந்துவரும் இருப்பிடங்களில் சமாதானம், ஜனநாயகத்துடனும், நிலையாகவும் வாழ வேண்டும் என்பதேயாகும். விலக்கப்பட்டும் சிதைக்கப்பட்டுமுள்ள, தமிழர்கள் முஸ்லீம்கள் ஆகிய எல்லா தமிழ்பேசும் மக்களும், மறுபடியும் அங்கு குடியேற்றப்பட்டு தங்கள் சுயநம்பிக்கையை மீண்டும் பெற்ற பின் கிழக்கின் தமிழ் தலைவர்கள் அம் மாகாணத்தின் முஸ்லிம், சிங்கள தலைவர்களுடன் கலந்தாலோசித்தும், ஒருங்கிணைந்தும் கிழக்கின் எதிர்காலம் பற்றித் தீர்மானிக்கலாம்.

**ஒருங்கிணைந்த வடக்கு-கிழக்கு அமைப்பே இலங்கையின் ஐக்கியத்தை பலப்படுத்தும்.**

இவ் அரசியல் ஏற்பாடுகள், ஓர் ஐக்கிய இலங்கைக்குள் சிறுபான்மை சமூகங்களின் பாதுகாப்புக்கும் அவர்களுடைய நலன்கள் அபிலாஷைகளைப் பேணி வளர்ப்பதற்குமே என்பதை மனதில் கொள்ள வேண்டும். எனவே, அரசியற் தீர்வுகளை அணுகும் போது புலிகள் பற்றிய மருட்சியை அடிப்படையாகக் கொள்ளக் கூடாது. பெரும்பாலானோர் விரும்பும் அரசியல் கட்டமைப்பைக் கொண்ட தீர்விற்கான கோரிக்கை, தனிநாடு ஒன்றைச் சிருஷ்டிப்பதற்காகவோ அல்லது தமிழர்களை புலிகளின் பயங்கரவாதத்துக்கு கையளிப்பதற்காகவோ அல்ல. தனித்தமிழ் மாகாணத்தை ஏற்படுத்தும் முயற்சிகள் தவிர்க்க முடியாதவாறு குறுகிய தமிழ் தேசியவாதிகளையே ஊக்கிவித்து பலப்படுத்தும். அத்தோடு, அதனால் சிங்கள தீவிர இன வெறியர்கள் சிங்கள பொது மக்களிடையே அவர்களின் செல்வாக்கை விரிவுபடுத்தவுமே உதவும். அரசியல் தீர்வு, இனப் பிரச்சனையை முடிவுக்குக் கொண்டு வருவதற்காகவேயன்றி அதை நிரந்தரமாக நீடிப்பதற்கல்ல.

பல்வேறுபட்ட அரசியல் வழிமுறைகளின் மூலம் மக்களின் பல்வேறு பகுதியினரது பல்வேறு நலன்களை சமமாக திருப்திப்படுத்தியும் நாட்டின் ஐக்கியத்தையும் இறைமையையும் பேணி வளர்த்து இலங்கையை பல்லின மக்களின் ஐக்கிய தேசமாக உருவாக்குவதுமே ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தூரநோக்காகும். எனவே, ஒரு அரசியல் தீர்வானது, முரண்பாடுகளுக்கு எதிராகவும் யுத்தத்தை நலிவடையச் செய்யவும் நாடு முழுவதினதும் நாட்டின் சகல சமூகத்தினரதும் சுபீட்சத்திற்கான சமாதான மற்றும் ஜனநாயக சூழ்நிலையை நிலைநிறுத்துவதற்குமான கட்டுமானங்களையும், பாரம்பரியங்களையும் உருவாக்க வேண்டும். எந்த ஒரு தீர்வும் அனைத்து வகைப்பட்ட குழுக்களையும் ஒரே சமயத்தில் திருப்திப்படுத்த மாட்டாது. எனினும், நியாயமானதும் நீதியானதுமான தீர்வொன்றினைக் கண்டு, நம்பிக்கையுடன் எல்லோரும் ஒருங்கிணைந்து செயலாற்றுவதை ஊக்குவிக்கும் வகையில் அதனை ஸ்தாபிப்பதுதான் பலதரப்பிலும் காணப்படும் தீவிரவாத சக்திகளுக்கு முட்டுக்கட்டை போடும்.

சிங்கள மக்களின் நலன்களில் நேர்மையான அக்கறையும் தமிழ்மக்களுக்கு பங்கமும் நினைக்காத சிங்களத் தலைவர்கள் இத்தகைய ஒழுங்குகளை விரும்புவார்கள் என நாம் எதிர்பார்க்கிறோம். சிங்கள மக்களின் தலைவர்கள், கடந்த காலத்தையும், சமகாலத்தையும் புரிந்துகொண்டு இலங்கையினது சகல மக்களதும் நலன்களுக்காக விவேகத்துடனும் துணிவுடனும் உறுதியுடனும் நியாயமான அரசியல் தீர்வை அளிப்பார்கள் என்பதே தமிழ் மக்களது எதிர்பார்ப்பாகும்.

இலங்கையில் நிலவும் சமூக அரசியல் வளர்ச்சியின் யதார்த்தங்களையும் தமிழர்களின் நிலைமையையும் புரிந்துகொள்ளும்படி தமிழ் மக்களின் தலைவர்களை ஈபிஆர்எல்எவ் வேண்டுகிறது. நாகரீகம், அறிவு, பொறுப்பு வாய்ந்த எந்த மனிதனும் இரத்த தாகம் படைத்த

யுத்த வெறியர்களுக்கு உதவமாட்டான். சமாதானத்தையும் ஜனநாயகத்தையும் அடைவதற்கு விட்டுக்கொடுப்புகள், இணக்கப்பாடு, கருத்தொற்றுமை ஆகியவற்றுடன் பரஸ்பர அபிலாஷைகள் மற்றவர்களுடைய அச்சங்கள் ஆகியவற்றை கருத்திற் கொள்வது முக்கியமானதும் தவிர்க்க முடியாததுமாகும்.

## 08 மாநில சட்ட மன்றம்

1) ஒவ்வொரு மாநில சட்ட மன்றமும் இரண்டு அவைகளைக் கொண்டதாக இருக்கும்-

   i. பிராந்திய சட்டப் பேரவை,

   ii. தேசிய சமூகங்களின் பிராந்திய அவை.

2) நாடாளுமன்றத்திற்கென பிரத்தியேகமாக குறித்து ஒதுக்கப்பட்டவற்றைத் தவிர மற்றைய அனைத்து விடயங்கள் சம்பந்தமான சட்டங்களை ஆக்கும் அதிகாரம் இந்த மாநில சட்டமன்றங்களுக்கு உண்டு. உடன்பாட்டு நிரலில் (அவ்வாறான நிரல் இருக்குமாயின்) குறித்துரைக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக நாடாளுமன்றத்தினால் ஆக்கப்பட்ட சட்டங்களுக்கு உட்பட்ட வகையிலேயே இந்த நிரலிலுள்ள விடயங்களின் மீது மாநில சட்ட மன்றங்கள் சட்டங்களை ஆக்க முடியும்.

3) மாநில சட்ட மன்றங்கள் நாடாளுமன்றத்திற்கோ அல்லது மத்திய அரசாங்கத்திற்கோ கீழ்ப்பட்ட இரண்டாந்தர நிறுவனங்களல்ல நாட்டின் அரசாங்க முறைமையின் ஒரு முக்கியமான பகுதியாகவே அவை கொள்ளப்படல் வேண்டும்.

4) ஆளுநரை எழுத்து மூலமாக மாநிலத்தின் முதலமைச்சர் வேண்டும் பட்சத்தில், ஆளுநரால் மாநில சட்ட மன்ற அவைகள் கூட்டப்படவோ, இடைநிறுத்தப்படவோ, கலைக்கப்படவோ முடியும்.

## 09. ஆளுநர்

1) மாநிலத்தின் முதலமைச்சர், எதிர்கட்சித்தலைவர் ஆகியோருடனான கலந்தாலோசனையின் பிரகாரம் ஐந்து வருடங்களுக்கு ஜனாதிபதியினால் நியமிக்கப்படும் ஆளுனர்தான் மாநில ஆட்சி அமைப்பிற்கு ஜனாதிபதியின் பிரதிநிதியாவார்.

2) அரசாங்க சேவையில் பணி புரியும் எவரும் ஆளுநர் பதவிக்கு நியமிக்கப்படக் கூடாது. சட்டங்களினால் குறிப்பிடப்பட்ட கௌரவ பதவிகள் தவிர, ஆளுநராக இருப்பவர் அரசிலோ, தனியார் நிறுவனங்களிலோ அங்கத்தினராகவோ அல்லது பொறுப்பு வகிப்பவராகவோ இருக்க முடியாது.

3) மாநில சட்ட மன்ற அவைகள், மாநில அரசாங்கம், மாநில நிர்வாக அமைப்பு, மாநில காவல்துறை, மாநில நீதித்துறை நிர்வாகங்கள் ஆகியவை அடங்கலான ஆட்சியமைப்புக்கு சம்பிரதாயப்படியான தலைமை ஆட்சியாளராக ஆளுநர் இருப்பார்.

4) **சம்பிரதாயமாக மாநில ஆட்சியமைப்பின் நிறைவேற்று அதிகாரங்கள் ஆளுநரிடமே அளிக்கப்பட்டிருக்கும். இருப்பினும் அவர் அவ்வதிகாரங்களை மாநில முதலமைச்சரினதோ அல்லது மாநில மந்திரி சபையினதோ அறிவுரையின் பேரிலேயே உபயோகிக்க முடியும்.**

5) ஆளுநர் ஜனாதிபதியின் சார்பில் பிராந்திய அளவில் செயற்படும் அரசியல் யாப்பின் கண்காணிப்பாளர். எனவே, எந்த அலுவலகமுமோ, எவருமோ, ஜனாதிபதிக்கும் ஆளுநருக்கும் இடையிலுள்ள தொடர்புகளில் குறுக்கிடவோ, அவற்றைப்பற்றி கேள்விகள் எழுப்பவோ முடியாது.

6). **இடைக்கால (காபந்து) அரசாங்கத்தின் உருவாக்கம்**

முதலமைச்சரின் அறிவுரையின் பிரகாரம் மாநில சட்டப் பேரவை, ஆளுநரால் கலைக்கப்படும் பட்சத்தில், மறு தேர்தல் முடிந்து புதிய அரசாங்கம் உருவாகும் வரை **முதலமைச்சரைத் தொடர்ந்து கடமையாற்றும்படி ஆளுநர் கோரலாம்.**

ஆனால், மக்களால் தெரிவு செய்யப்பட்ட அரசாங்கம் பெரும்பான்மையை இழந்து நிற்கும் நிலையில், வேறொரு மாற்றுக் கட்சியினால் பெரும்பான்மை ஆதரவை நிரூபிக்க முடியாத நிலையில், சட்டப் பேரவை கலைக்கப்படுமாயின், அவ்வேளையில் வேண்டப்படும் **இடைக்கால அரசாங்கத்தை ஜனாதிபதியால் நியமிக்கப்படும் ஆலோசகர்களுடன் ஆளுநரே நிர்வகிப்பார்.**

7). ஜனாதிபதியின் ஆட்சி பிரகடனப்படுத்தப்படும் பட்சத்தில், அந்தக் குறிப்பிட்ட காலத்திற்கென, ஜனாதிபதி தனக்கு விரும்பிய ஆனால் அந்த அரசாங்கத்தின் எந்த அங்கத்திலும் பணி புரிந்து கொண்டிருப்பவர்களை உள்ளடக்காது, தேவையான வினைத்திறன் கொண்டவர்களை நியமித்து ஆலோசனை குழு ஒன்றினை ஆளுநர் நியமிப்பார்.

8) மக்களால் தெரிவு செய்யப்பட்ட அரசாங்கம் பதவியில் இருக்கும் போது ஜனாதிபதியுடனான தொடர்புகள் தவிர ஆளுநருக்கு பிரத்தியேகமான தன்னிச்சையான அதிகாரங்கள் கிடையாது.

9) தனது பதவிக்காலத்திலோ பதவி முடிந்த ஐந்து ஆண்டுகளுக்குள்ளாகவோ கட்சி அரசியலிலோ அல்லது ஒரு கட்சியின் நடவடிக்கைகளிலோ ஆளுநர் ஈடுபட முடியாது.

10) ஓர் ஆளுநர் மீளவும் நியமிக்கப்படலாம். ஆனால், எப்படியாயினும் ஒருவருடைய ஆளுநர் பதவியின் மொத்தக்காலம் பத்து வருடங்களுக்கு மேற்பட முடியாது.

## 10. மாநில அரசாங்கம்

1) மாநில சட்ட மன்றங்களின் சட்டவாக்க அதிகாரங்கள் கொண்ட அனைத்து விடயங்களிலும், மாநில அரசாங்கங்கள் நிறைவேற்று அதிகாரங்களை கொண்டிருக்கும்.

(குறிப்பு: மத்திய அரசாங்கம், பாராளுமன்றத்தினால் சட்டங்கள் ஆக்கப்படக் கூடிய விடயங்களின் மீதே நிறைவேற்று அதிகாரங்களை கொண்டிருக்கும். இதனால், அரசியல் யாப்பில் உடன்பாட்டு நிரல் என ஒன்று இருக்கும் பட்சத்தில், அந்த உடன்பாட்டு நிரலில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் தொடர்பான சட்டவாக்க, நிறைவேற்று அதிகாரங்கள் பற்றிய குழப்பங்களும், குளறுபடிகளும் களையப்படும். இந்த உடன்பாட்டு நிரலுக்கு "இணை நிரல்" என்ற வியாக்கியானத்தைக் கொடுப்பதானது மாநில அரசாங்கங்களைக் கீழ்பணிய வைத்து மத்திய அரசாங்கத்தின் அதிகாரங்களைப் பெருக்குவதற்கான மறைமுக நடவடிக்கையாகவே அமையும்.

2) மாநில அரசின் முதலமைச்சர் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டு, தனது சத்தியப்பிரமாணத்தை ஜனாதிபதி முன்னிலையில் எடுத்துக் கொள்வார்.

3) அமைச்சரவையின் அங்கத்தவர்களை ஆளுநர் நியமிப்பதுவும், நீக்குவதுவும் முதலமைச்சரின் அறிவுரையின் பிரகாரமே மேற்கொள்ளப்படும்.

4) மாநில முதலமைச்சரும் மந்திரி சபையும், கூட்டுப் பொறுப்புள்ளவர்களாகவும், மாநில சட்ட மன்றத்துக்கு பதிலளிக்க வேண்டியவர்களாகவும், கணக்குக்காட்டுபவர்களாகவும் செயலாற்றுவதற்குக் கடப்பாடு உடையவர்கள் ஆவர்.

5) மாநில அரசாங்கத்தின் முதலமைச்சர் மாநில சட்டப் பேரவையில் பெரும்பான்மையான ஆதரவைக் கொண்டிருசக்கும் வரை தொடர்ந்து பதவி வகிப்பார். அவரது ஆதரவுபற்றி சட்டப் பேரவையில் மாத்திரமே பரிசோதிக்கப்படலாம்.

## 11. மாநிலத்தில் ஜனாதிபதி ஆட்சியை பிரகடனப்படுத்துதல், மாநில சட்டப் பேரவை, மற்றும் மாநில அரசாங்கத்தை இடைநிறுத்தல், கலைத்தல் மற்றும் நீக்குதல்

- மாநில முதல்வரும் அமைச்சரவையும் ஒட்டுமொத்தமாகவோ அல்லது மாநில சட்ட மன்றமோ, குடியரசின் ஒருமைப்பாட்டிற்கும் இறைமைக்கும் பங்கம் விளைவிக்கும் வகையில் அதிகாரத் துஷ்பிரயோகம் செய்கிறார்கள் என அரசியல் யாப்பில் குறித்துரைக்கப்பட்ட அளவுகோல்களின் அடிப்படையில் ஜனாதிபதி புறத் திண்மையாகக் காட்டமுடிகின்ற பட்சத்தில், அரசியல் யாப்பின் உள்ளடக்கங்களின் பிரகாரம் மத்திய அமைச்சரவையின் உடன்பாட்டுடன் தனது அதிகாரத்தை பிரயோகித்து மாநில அரசாங்கத்தையோ அல்லது மாநில சட்டசபையையோ அல்லது இரண்டையுமே இடைநிறுத்தி வைக்கலாம். இப் பிரகடனம், 14 நாட்களுக்குள் ஜனாதிபதியால், அவரால் விசேடமாக அமைக்கப்பட்ட மேல் நீதிச் சபையினருக்கு சமர்ப்பிக்கப்பட்டு, அதனால் மாநில அரசாங்கம் நீக்கப்படுவதா, அல்லது மாநில சட்டசபை கலைக்கப்படுவதா அல்லது இரண்டுமே செய்யப்பட வேண்டுமா என்பது பற்றித் தீர்ப்பு பெறப்பட வேண்டும். அதனைத் தொடர்ந்து, நாடாராளுமன்றத்தில் மொத்த உறுப்பினர்களில் ஐந்தில் மூன்று பெரும்பான்மையானவர்களின் ஆதரவு கொண்ட விசேட தீர்மானம் ஒன்றினை நிறைவேற்றிய பின்னரே நீக்குவது அல்லது கலைப்பது ஆகியவை இறுதியாக்கப்பட முடியும்.
- ஜனாதிபதியினால் தனது பிரகடனம் மீளப்பெறப்பட்டாலோ அல்லது நீதிச்சபையினால் அல்லது நாடாளுமன்றத்தில் அப் பிரகடனம் ரத்துச் செய்யப்பட்டாலோ, தெரிவு செய்யப்பட்ட மாநில சட்டப் பேரவையும் மாநில அரசாங்கமும் அவற்றிற்கு உரிய முடிவடையும் காலம்வரை (இடைநிறுத்தப்பட்ட காலத்தை உள்ளடக்காது) தொடர்ந்து செயற்பட அனுமதிக்கப்பட வேண்டும்.
- ஆளுநரின் ஆட்சிக்கான பிரகடனம் 6 மாதங்களுக்கு மேல் நீடிக்கப்படுவதானால் அதற்கு மேலும் ஆறு மாதங்களுக்கென நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆதரவுடன் அங்கீகாரம் பெறப்படல் வேண்டும்.

## 12. மாநில அரசமைப்பு முறைமையை பாதுகாத்தல்

- o முதல் உருவாக்கப்பட்ட வடக்கு கிழக்கு மாநில சட்ட மன்றம் 1990ல் கலைக்கப்பட்ட பின்னர், அதன் அதிகாரங்களும் செயற்பாடுகளும், நேர்மையற்ற முறையில் கொழும்பிற்கு திரும்பப் பெறப்பட்டன. மத்திய அமைச்சர்களும் மத்திய அரசின் அதிகாரிகளும் அவற்றை அபகரித்துக்கொண்டு கொழும்பிலிருந்து நேரடியாக அவற்றை செயற்படுத்தினர். இச் செயல்கள், சம்பந்தப்பட்ட அரசியல் யாப்பு விதிகளை பலவீனப்படுத்துவதாகவும் மீறுவதாகவும் அமைந்தன. இந் நடவடிக்கைகளினாலும், திரிபுபட்ட வியாக்கியானங்களின் மூலமாகவும் அந்த மாநில சட்ட மன்றம் கலைக்கப்பட்டதைத் தொடர்ந்து, சம்பிரதாயத்துக்காக ஓர் ஆளுநரையும் அதிகாரம் எதுவுமற்ற அதிகாரிகளையும் விட்டு வைத்து, மாநில ஆட்சியமைப்பே செயலிழந்ததாக ஆக்கியது இலங்கையின் மத்திய ஆட்சியே. இந்த நடைமுறைகள் மாநில கட்டமைப்பின் கீழ் செயலாற்றும் பொதுசேவை அதிகாரிகளுக்கு ஊறு விளைவிக்கும் சங்கடங்களை ஏற்படுத்துகின்றது.
- o முதலாவது வடக்கு-கிழக்கு மாநில சட்ட மன்றமானது பல்வேறு நெருக்கடிகள், சாதகமற்ற நிலைமை ஆகியவற்றிற்கு மத்தியில் நிறுவப்பட்டபோது மிகவும் ஆற்றலும் அனுபவமும் வாய்ந்த தமிழ் பொதுசேவை அதிகாரிகள் ஒருவர் பின் ஒருவராக இணைந்து துணிச்சலுடனும், ஆர்வத்துடனும் செயற்பட்டார்கள். திரும்பவும் முன்னர் இருந்தது போலவே ஒரு மாநில அரசைக் கட்டியெழுப்புவதற்கான முயற்சிகள் தமிழ் அரசியல் தலைவர்களால் மேற்கொள்ளப்படும் வேளையில் தகுந்த நிர்வாக

அதிகாரிகளை இந்தக் கட்டமைப்பின் மீது நம்பிக்கை கொள்ள வைப்பது மிகவும் சிரமமான காரியமாகும். மாநில ஆட்சியமைப்பின் நிர்வாகக் கட்டமைப்பில் சேவையாற்றுவதில் உள்ள தயக்கங்களையும் அச்சங்களையும் நீக்கும் முகமாக, அரசியல் யாப்பானது வெளிப்படையான உத்தரவாதங்களை உள்ளடக்கியிருத்தல் வேண்டும். அத்துடன், மூத்த பொதுசேவை ஊழியர்களுக்கு உத்தரவாதம் அளிக்ககூடிய நிர்வாகப் பிரகடனங்களை மத்திய அரசு மேற்கொள்ளுதலும் அவசியமாகின்றது.

- மாநில அரசுகளை கலைப்பதற்கும் மாநில அரசாங்கங்களை நீக்குவதற்கும் மத்திய அரசுக்கு அதிகாரம் உள்ள முறையானது இந்திய அரசியல் யாப்பிலும் உள்ளது தானே என வாதிடுபவர்கள், இந்திய மத்திய மாநில ஆட்சியமைப்புகளுக்கிடையில் இருக்கும் உறவு முறைகளை இலங்கையின் மத்திய அரசு கடந்த 16 வருடங்களாக வடக்கு கிழக்கு மாகாண விடயத்தில் கடைப்பிடிக்கவில்லை என்ற உண்மையைப் புரிந்து கொள்ள வேண்டும். உண்மையில் காலம் சென்ற ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவினால் உருவாக்கப்பட்ட பிழையான மரபை திருத்தியமைப்பதற்கு வலுவான முன்னெடுப்புக்கள் மிகவும் அவசியமானவையாகும்.
- எனவே, எதிர்காலத்திற்கான அரசியல் யாப்பு சம்பந்தப்பட்ட ஒழுங்குகள் வெளிப்படை யானதாகவும், தெளிவானதாகவும், நேரடியானதாகவும், வேறு விதமாக விளங்கப்பட முடியாததாகவும் அமைக்கப்பட வேண்டும்.
- மாநில சட்டப் பேரவை அல்லது மாநில அரசாங்கம் அரசியல் யாப்பு விதிகளின் பிரகாரம் இடைநிறுத்தப்படவோ அல்லது கலைக்கப்படவோ முடியும். ஆனால், எந்தச் சூழ்நிலையிலும் ஒரு மாநில ஆட்சியமைப்பின் நிர்வாகக் கட்டுமானத்தில் உள்ள எந்தவொரு பகுதியும், அரசியல் யாப்பில் அவை பேணப்பட்டிருக்கும் வரை, இடைநிறுத்தப்படவோ நீக்கப்படவோ கூடாது.
- எந்தவொரு மத்திய அமைச்சரும் மாநில ஆட்சியமைப்பின் நிறைவேற்றதிகாரத்துக்கு பரவலாக்கப்பட்ட எந்தவொரு விடயத்தின் மீதும் முழுமையாகவோ, பகுதியாகவோ தனது அதிகாரங்களை பிரயோகித்தால், அது மாநில ஆட்சியமைப்பின் கட்டுமானத்தைப் பேணும் அரசியல் யாப்பிற்கு முரணானதாகக் கொள்ளல் வேண்டும். ஜனாதிபதியினால் பிரகடனப்படுத்தப்பட்ட ஆளுநர் ஆட்சிக் காலப்பகுதியில், மாநில சட்டப் பேரவைக்கு பகிர்வு செய்யப்பட்டிருக்கும் சட்டவாக்க அதிகாரங்கள் மட்டுமே நாடாளுமன்றத்தினால் பிரயோகிக்கப்படும்.
- மாநில ஆட்சியமைப்பின் கட்டமைப்புகளைப் பாதுகாப்பதும், ஒவ்வொரு மாநில அரசாங்கமும் அரசியல்யாப்பு விதிகளின் பிரகாரம் செயற்படுகிறது என்பதை உறுதிப்படுத்துவதும், மத்திய அரசாங்கத்தின் கடமையேயாகும். உண்மையில், மாநில ஆட்சியமைப்பின் கட்டுமானங்களை அவை எதிர்கொள்ளும் பிரச்னைகளுக்கு முகம் கொடுக்கும் வகையாகவும், அரசியல்யாப்பின் பிரகாரம் தமது கடப்பாடுகளையும், பொறுப்புகளையும் நிறைவேற்றும் வகையாகவும் ஸ்திரமாக வைத்திருப்பதுவும் மத்திய அரசாங்கத்தின் கடமையே. எந்தக் காரணங்களுக்காகவும் மாநில ஆட்சிக்கான அமைப்புக்கள் பலவீனப்படுத்தப்பட்டால், அந்த மாநிலத்தின் மக்களை அவர்களின் மாநில ஆடசியமைப்பிலிருந்து மாத்திரமல்ல முழு தேசியகட்டமைப்பிலிருந்துமே அந்நியப்படுத்தியும் தனிமைப்படுத்தியும் விடும்.

## 13. மாநில அரசின் பொது நிர்வாகம்.

1) மாநில நிர்வாகத்திற்கான பிரதம செயலாளர், அமைச்சுக்களின் செயலாளர்கள், திணைக்களங்கள் மற்றும் துறைசார் சபைகளின் தலைவர்கள், மாவட்டங்களின் நிர்வாகத் தலைவர்கள் ஆகியோரை மாநில முதலமைச்சரின் அறிவுரையின் பிரகாரம், தேசிய நிர்வாகசேவை அலுவலர்களிலிருந்து ஆளுநர் நியமிப்பார்.

2) தொழில் நிபுணத்துவ அல்லது தொழில் நுட்பத்துறைகளுக்கான திணைக்களங்களின் நிறைவேற்று நிர்வாகத் தலைவர்களின் நியமனங்கள், மாநில சட்ட மன்றத்தின் சட்டங்களின் பிரகாரம் மாநிலத்தில் அந்தந்த துறைகளின் சேவைகளைச் சேர்ந்தவர்களிலிருந்து அமைச்சரவையின் தீர்மானத்தின்படி மேற்கொள்ளப்படும்.

3) மாநிலத்தின் பொது நிர்வாகத்திற்கான ஏனைய அனைத்து நியமனங்களும் மாநில சட்ட மன்றத்தின் சட்டப் பிரமாணங்களுக்கு அமைவாக மாநில அமைச்சரவையின் தீர்மானத்தின்படி மேற்கொள்ளப்படும்.

4) மாநில சட்டசபையினால் ஏற்படுத்தப்படும் சட்டப் பிரமாணங்களுக்கு அமைவாக, மாநில ஆட்சியமைப்புக்கான அரச சேவையாளர்கள் மற்றும் சம்பந்தப்பட்ட ஆளணிகளைத் தேர்வு செய்தல், நியமனங்களை வழங்குதல், அவற்றைச் சீரமைத்தல், அவர்களின் பதவி உயர்வுகளைத் தீர்மானித்தல் போன்ற இன்னோரன்ன விடயங்களில் ஆலோசனை கூறுபவையாகவும், மாநில அரசாங்கத்திற்கு கீழ்ப்படிந்த அங்கங்களாகவும். மாநில பொதுச்சேவை ஆணைக்குழுவும் மாநில பொலிஸ் சேவை ஆணைக்குழுவும் செயல்படும்.

## 14. மாநிலத்தின் நீதித்துறை நிர்வாகம்

1) மாநில சட்ட மன்றத்தின் சட்டப்பிரமாணங்களின் பிரகாரம், பிரதேச (சபை) பகுதிகளுக்கான நீதிமன்றங்களை மாநில அரசாங்கம் ஸ்தாபித்து நிர்வகிக்கும்.

2) இந்த நீதிமன்றங்களுக்கான நீதிபதிகள், மாநில நீதிச்சேவை ஆணைக்குழுவின் சிபாரிசின் பிரகாரம் ஆளுநரால் நியமிக்கப்படுவர்.

3) ஒவ்வொரு மாநிலத்திலும், மாநில நீதிச்சேவை ஆணைக்குழு ஒன்று இருக்கும். இந்த ஆணைக்குழு, மாநிலத்தில் நீதித்துறை நிர்வாகம் தொடர்பான விடயங்களில் மாநில அரசாங்கம் கலந்தாலோசிப்பதற்கும், அதற்கு ஆலோசனை வழங்குவதற்குமான நிறுவனமாகச் செயற்படும்.

4) இந்த ஆணைக்குழு, அமைச்சரவையின் ஆலோசனையின் பிரகாரம், ஆளுநரால் நியமிக்கப்படும்.

5) மாநில சட்ட மன்றத்தின் சட்டவிதிகளின் பிரகாரம், உள்ளூர் மட்டத்திலான பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வதற்கு, ஒவ்வொரு கிராம சேவகர் பிரிவிலும் மாநில நீதிச்சேவை ஆணைக்குழுவினால் ஸ்தாபிக்கப்பட்டு ஒழுங்கமைக்கப்படும் கிராமிய நீதிச்சபை இருத்தல் வேண்டும்.

6) மாநில நீதிச்சேவை ஆணைக்குழுவின் பிரேரிப்பின் பிரகாரம் சமாதான நீதவான்களை ஆளுநர் நியமிக்கவோ அல்லது நீக்கவோ முடியும்.

## 15. மாநில சட்டமாஅதிபர் / பிரதம சட்டவாதி

1) மத்திய அரசுக்கு சட்டமாஅதிபர் இருப்பது போலவே ஒவ்வொரு மாநில அரசுக்கும் சட்டமாஅதிபர் இருப்பார்.

2) மைய அரசின் சட்டமாஅதிபர் எவ்வாறான செயற்பாடுகளும், பொறுப்புக்களும் கொண்டிருப்பாரே அவ்வாறே மாநில அரசு சம்பந்தப்பட்ட விடயங்களுக்கு மாநில அரசின் சட்டமாஅதிபர் இருப்பார்.

3) மாநில சட்டமாஅதிபரை முதலமைச்சரின் அறிவுரையின் பிரகாரம் ஆளுநர் நியமிப்பார்.

4) மாநிலத்தின் சட்டமாஅதிபர் மாநில அரசாங்கத்தின் பிரதம சட்டவாதியாக இருப்பார்.

5) சட்டமாஅதிபர் தொடர்பான சகல விடயங்களும் மாநில சட்ட மன்றத்தினாலேயே தீர்மானிக்கப்படும்.

## 16. மாநில சட்ட மன்றத்தின் அடிப்படை உரிமைகள்

1) அரசியல் யாப்பினால் பாராளுமன்றத்திற்கு பிரத்தியேகமாகக் குறித்து ஒதுக்கப்படாத சகல விடயங்கள் மீதும், மாநில சட்ட மன்றம் சட்டங்களையும், விதிகளையும் உருவாக்கும்.

2) அரசியல் யாப்பில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளை மீறாத வகையில் மாநில சட்ட மன்றம் அதனது சட்டங்களையும் விதிகளையும் ஏற்படுத்தவும், தீர்மானங்களையும் சிபாரிசுகளையும் மேற்கொள்ளவும் முடியும்.

3) நாடாளுமன்றத்திற்கும் அதன் உறுப்பினர்களுக்கும் உள்ளது போன்றே மாநில சட்ட மன்றத்துக்கும் அதன் உறுப்பினர்களுக்குமான காப்புரிமைகளும், பேறுகளும், விலக்கீடுகளும் வழங்கப்பட வேண்டும்.

4) குறிப்பிட்ட மாநில அரசு ஜனாதிபதியின் பிரகடனப்படி ஆளுநர் ஆட்சியில் இருக்கும் பொழுது மாநில சட்ட மன்றத்தின் சட்டவாக்க அதிகாரங்கள் நாடாளுமன்றத்துக்கு இடமாற்றப்படலாம். ஆனால், எந்தச் சந்தர்ப்பத்திலும் மாநில அரசாங்கத்தின் நிறைவேற்று அதிகாரங்கள் இடமாற்றப்படக் கூடாது. மாநில சட்டப் பேரவை குறிப்பிட்ட அவசரகால விதிகளுக்கு ஏற்ப இடைநிறுத்தப்பட்டாலோ அல்லது கலைக்கப்பட்டாலோ, ஆளுநர் சகல நிறைவேற்று அதிகாரங்களையும் மாநில அமைச்சுக்களின் செயலாளர்கள் ஊடாக நேரடியாக பிரயோகிப்பார். (மத்திய அமைச்சர்கள் எந்தவொரு கட்டத்திலும் மாநிலங்களின் அதிகாரத்தில் தலையிடவோ பொறுப்புக்களைக் கையேற்கவோ முடியாது என்பதே இதன் அர்த்தமாகும்)

## 17. மாநிலத்தின் அரசியல் யாப்பு

1) குடியரசின் அரசியல் யாப்பிற்கு முற்றுமுழுதாக இசைவானதாக மாநில சட்ட மன்றங்கள் தமது சொந்த அரசியல் யாப்பை மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் உருவாக்கிக் கொள்ளலாம். இப்படியான அரசியல் யாப்பினை ஏற்படுத்தியதின்படி, "அவசரகாலம்" என்பதின் கீழ் மாநில சட்டப் பேரவை கலைக்கப்படும் போது அவ் யாப்பினை ஜனாதிபதி இடைநிறுத்தி வைக்கலாம். ஆனால், ஜனாதிபதியின் ஆட்சி வாபஸ் பெறப்படும் பட்சத்தில், உடனடியாகவே இந்த மாநில அரசியல் யாப்பு மீள் செல்லுபடியானதாகும். மாநில அரசியல் யாப்பின் முழுமையோ, அல்லது அதன் ஒரு பகுதியினதோ செல்லுபடியாகும் தன்மை, அது கோரப்பட்டால், உயர்நீதிமன்றத்தினால் தீர்மானிக்கப்படும்.

2) மாநில சட்ட மன்றமும், மாநில அரசாங்கமும் நாட்டின் ஒருமைப்பாட்டிற்கும், இறைமைக்கும் பங்கம் ஏற்படுத்தும் நடைவடிக்கைகளை மேற்கொள்ள முடியாதவாறு அரசியல் யாப்பு கட்டுப்படுத்தும் எனினும், எந்தெந்த விடயங்களில் இறுதி முடிவை எடுப்பதற்கும், அதனை நடைமுறைப்படுத்துவதற்குமான அதிகாரத்தினை நாடாளுமன்றமும் மத்திய அரசாங்கமும் கொண்டிருக்கின்றனவோ அந்த விடயங்கள் எவை தொடர்பாகவும் சம்பந்தப்பட்ட தெரிவுகளையும் பிரேரணைகளையும் சிபாரிசுகளையும் மத்திய அரசாங்கத்தின் கவனத்துக்கும் தீர்ப்புக்கும் கொண்டுவர மாநில சட்ட மன்றத்துக்கும், மாநில அரசாங்கத்துக்கும் உரிமை உண்டு.

## 18. மாநில அரசாங்கத்தின் உருவாக்கம்

### 18a. மந்திரி சபை உருவாக்கம்

**தற்போதைய அமைப்பு அல்லது நிறைவேற்றுக்குழு முறை**

மாநில சட்ட மன்றத்தில் பிரதிநிதித்துவம் செய்யும் கட்சிகள் அனைத்தையும் சபையில் அவை கொண்டிருக்கும் பிரதிநிதித்துவ விகிதாசாரத்தின் பிரகாரம் மந்திரிசபையை உருவாக்குவது, பல காரணங்களால் பிழையானது. அவற்றுள் சில பின்வருமாறு-

1) தமிழர்களுடைய கோரிக்கையானது, ஒரு நிர்வாகச் சீர்திருத்தத்திற்கான கோரிக்கை மாத்திரமே என்று அதனை எளிமையாக்கி விட முடியாது. உண்மையில் அது அரசியல் அதிகாரத்தில் சரிசமமாக பங்குபற்றுவதற்கான கோரிக்கையாகும்.

2) மாகாணத்து மக்களின் ஜனநாயக அபிலாஷைகள், சுயேச்சையாக பரிமாண வளர்ச்சியடைய விட்டுவிட வேண்டும்.

3) ஒரு குறிப்பிட்ட நிலைமையில் ஓர் இடைக்கால ஒழுங்கிற்கான பிரத்தியேக தேவை இருப்பினும், நீண்டகால நோக்கத்திற்கு குந்தகம் விளைவிக்கக்கூடியதும் அரசியல் முன்னேற்ற வளர்ச்சிக்கு இடையூறாகவும் இருக்கக் கூடியதென சந்தேகப்படக் கூடிய ஒன்றை நிரந்தரமான ஒழுங்காக ஏற்படுத்திக் கொள்ளக் கூடாது.

4) ஓர் ஒற்றுமையான அரசியல் பொதுத் திட்டத்துடன் உடன்பாடு கொண்டிருக்க முடியாத கட்சிகளின் பிரதிநிதிகளை ஒன்றிணைத்து ஓர் அரசாங்கம் உருவாக்கப்பட்டால், அந்த அரசாங்கத்தின் முதல்வரும் மற்றைய மந்திரிகளும் பாரம்பரிய ஜனநாயக முறைமைகளுக்கோ அல்லது அரசியல்யாப்பின் கூட்டுக் கடமைகள், பொறுப்புகளுக்கோ, மாநில அரசின் மக்கள் பிரதிநிதித்துவ அவைக்கு பதிலளிக்கவோ, கணக்குக் காட்டவோ வேண்டிய பொறுப்புக்களுக்கு கட்டுப்படுத்தப்பட முடியாதவர்கள் ஆவர். அத்துடன், இப்படியானதொரு அரசாங்கம் தன்னுடைய செயற்பாடுகளிலும் ஈடுபாடுகளிலும், திறனற்றதாகவும் காத்திரமற்றதாகவும் இருப்பதற்கு வழி சமைத்து அதனால் மக்கள் அன்னியப்படுத்தப்படவும் விரக்தி அடையவும் வைக்கும்.

எனவே, மந்திரிசபையின் உருவாக்கம், ஒரு குறிப்பிட்ட கட்சியியையோ, அவையில் பெரும்பான்மையைத் தக்கவைத்திருக்கும் கூட்டணியையோ சேர்ந்தவராக உள்ள தலைமை மந்திரியின் சிறப்புரிமை அதிகாரத்துக்கும் மேலாண்மைக்கும் பொறுப்பிற்கும் தொடர்ச்சியாக விட்டுவிட வேண்டும்.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட மந்திரிகளின் குழுவானது மாநிலத்தின் முதலமைச்சரின் பதவியை வெறும் சம்பிரதாயமானதாக்கி விடும். அவருக்கு அவரது மந்திரிகளை நியமிக்கவோ, அவர்களுக்கான பொறுப்புகளை ஒதுக்கவோ சிறப்புரிமை அதிகாரம் இல்லை. அவ்வாறானவர் வெறுமனே சம்பிரதாயத்துக்குத் தலைவராகவும் மந்திரிசபையைக் கூட்டும் ஓர் அழைப்பாளராகவுமே இருப்பார்.

மக்கள் பிரதிநிதிகளை முடிந்த அளவுக்குக் கூட்டிணைத்ததொரு அரசாங்க அமைப்பானது, நல்ல ஜனநாயகத்தின் வடிவமென்றோ அல்லது நாட்டின் நலன்களுக்கு இன்றியமையாதது என மத்திய அரசியல் தலைவர்கள் கருதினால், இப்படியானதொரு அரசாங்க ஏற்பாட்டை நடைமுறைப்படுத்துதலும் செயற்படுத்துதலும் மத்திய ஆட்சியமைப்பிலேயே தொடங்கப்பட வேண்டும். மாநில சட்ட மன்றத்தினரும், மாநில அரசாங்கங்களும் அவ்வவற்றின் செயற்பாடுகளுக்குத் தேவையான குழுக்களை உருவாக்கிக் கொள்ளுதல், அவற்றின் செயல்கள் மற்றும் நடைமுறைகளுக்கான வழக்கங்களையும் மரபுகளையும் ஏற்படுத்திக் கொள்ளல், அலுவல்களை நடாத்துவதற்கான நடத்தை நெறிமுறைகள் ஆக்குதல் ஆகியனவற்றை நாடாளுமன்றத்திலிருந்தும், மத்திய ஆட்சியமைப்பிலிருந்தும் கற்றறிந்து பின்பற்றுதல் வேண்டும்..

## 18b. மாநில ஆட்சியில் மந்திரிகளின் எண்ணிக்கை

அரசியல் யாப்பு மாநில மந்திரிசபையில் மந்திரிகளின் எண்ணிக்கையை குறிப்பிட்ட பதவிகளின் அடிப்படையில் தீர்மானிக்கப்படக் கூடாது. ஒரு நாட்டு அரசாங்கத்தின் மந்திரிப்பதவிகளின் அதிகபட்ச குறைந்தபட்ச எண்ணிக்கையை வரையறை செய்வதற்கான நிபந்தனைகளும் வழிகாட்டு நெறிமுறைகளும் அரசியல் யாப்பில் உள்ளடக்கப்படலாம். உதாரணமாக, மத்திய அல்லது மாநில அரசாங்கங்களில் மந்திரிசபையின் மொத்த எண்ணிக்கை அந்தந்த அவைகளின் மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கையில் 5

வீதத்திற்குக் குறையாமலும் 15 வீதத்திற்குக் கூடாமலும் இருக்க வேண்டும் என வரையறை செய்யலாம்.

எனினும், மத்திய, மாநில அரசாங்கங்கள் அவ்வவற்றின் மந்திரி சபைகளை அமைத்துக் கொள்ளும் விடயத்தில், அந்தந்த ஆட்சியமைப்பின் நில எல்லைக்குள் வதியும் வெவ்வேறு தேசிய சமூகங்களின் சனத்தொகை விழுக்காட்டைப் பிரநிதித்துவப் படுத்தும் வகையில் மந்திரிகளைக் கொண்டிருப்பதற்கு உரிய நிபந்தனைகளையும் வழிகாட்டுதல்களையும் அரசியல் யாப்பு உள்ளடக்கியிருப்பது அத்தியாவசியமானதாகும்.

## 19. நிதிவளம் தொடர்பான அதிகாரப் பகிர்வு

மாநில அரசு தனது கடமைகளையும் பொறுப்புக்களையும் அபிவிருத்தித் திட்டங்களையும் நிறைவேற்றுவதற்கும் மத்திய அரசில் அளவுக்கு அதிகமாக தங்கியிருக்காதிருப்பதற்கும் போதியளவு வருமானம் பெற்றுக்கொள்ள அதற்கான நிதிவள ஊற்றுமூலங்கள் மாநில அரசாங்கத்திற்கு இருக்க வேண்டும். அதற்காக, வருவாய் மூலங்களை போதியளவு பகிர்ந்தளிப்பதுடன் மத்திய வருவாயிலிருந்து மாநில அரசுகளுக்கு கட்டாய அடிப்படையில் ஒதுக்கீடுகளை மேற்கொள்வதற்கான தெளிவான விதிகளை அரசியல் யாப்பு கொண்டிருக்க வேண்டும்.

வருமானவரி அறவிடுவதற்கான தகுந்த கட்டமைப்பை மாநில அளவில் அபிவிருத்தி செய்வதற்கு குறிப்பிட்ட காலம் எடுக்கும் என்பது இ.யல்பாகும். இப்படியான கட்டமைப்பை அபிவிருத்தி செய்வதற்கான ஒத்தாசையை மாநில அரசாங்கத்திற்கு வழங்குவது மத்திய அரசாங்கத்தின் கடமையும் பொறுப்பும் ஆகும். வருமானம் திரட்டுவதற்கான ஒரு நிரந்தர கட்டுமானம் முழுமையாக ஸ்தாபிக்கப்படும் வரை, அந்தந்த மாநில அரசாங்கங்களின் இணக்கப்பாட்டுடன், மத்திய அரசாங்கம் ஒரு இடைக்கால ஒழுங்கினை அளிக்கலாம். மற்றைய அதிகாரங்களின் பகிர்வானது அர்த்தபுஷ்டியுள்ளதாக இருக்க வேண்டுமானால், வெறும் நிதிப் பரவலாக்கம் போதியதல்ல, மாறாக, நிதிவளங்களைத் திரட்டும் அதிகாரங்கள் உரிய அளவு பகிரப்படுவது இன்றியமையாததாகும். நிதி மூலங்களின் அதிகாரங்களை மத்தியப்படுத்தப்படுவது, மத்திய மாநில நல்லுறவுகளை அரித்துக் கரைத்து விடுவதோடு ஜனநாயகத்தின் அடிப்படை கூறுகளுக்கும் பங்கத்தை ஏற்படுத்தி விடும். ஏதாவது கட்டத்தில் மாநில அரசாங்கம் வேறொரு கட்சியினால் ஆளப்படும் பட்சத்தில், மத்தியில் ஆட்சியில் இருக்கும் கட்சியின் ஒருதலைசார் அரசியல் காரணமாக மாநில கட்டமைப்பின் ஸ்திரம் சீர்குலைக்கப்பட்டும் விடும். எனவே, மாநில ஆட்சிகள் போதியளவு வரிகள் மூலமான வருமானங்களை அறவிடுவதற்கும், அவற்றை அறவிடும் கட்டுமானங்களை ஏற்படுத்துவதற்கும், மாநில அரசுகளுக்கு தெளிவாகவும், திரிபுபடுத்தப்பட முடியாத வகையிலும் சட்டவாக்க மற்றும் நிறைவேற்று அதிகாரங்களை அரசியல் யாப்பு வழங்குதல்.

### 19a. மாநிலத்தின் நிதி ஆதாரங்கள்

1978 ஆம் ஆண்டின் அரசியல் யாப்பில் மேற்கொள்ளப்பட்ட 13வது திருத்தச் சட்டத்தின் மூலம் வழங்கப்பட்டதை விட அதிகமான நிதிவள அதிகாரப் பகிர்வு மாநில அரசுகளுக்கு இருக்க வேண்டும் என்பது பொதுவாகவே ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்றாகும். எனவே, மாநில ஆட்சிக்கேயுரிய வரி வருமான மூலங்கள், மத்திய அரசாங்கத்தின் வருமானங்களிலிருந்து அரசியல் யாப்பின் ஏற்பாடுகளின் மூலமாகவும் மற்றும் தேசிய பொருளாதார திட்டமிடல் மற்றும் நிதி ஆணைக்குழுவின் சிபார்சின் மூலமாகவும் வழங்கப்படும் நிதியுடன், மேலும் சில நிதி மூலங்களை உள்ளடக்கிய வகையில் குறைந்தபட்சம் பின்வரும் வகையில் நிதிவள அதிகாரங்கள் பரவலாக்கப்பட வேண்டும்:-

1) மாநிலத்தில் இடம்பெறும் மொத்த மற்றும் சில்லறை விற்பனைகள் மீதான வரிகள். (இந்த விற்பனை வரிகளானது மதிப்புக்கூட்டு வரி முறைமையினால் பிரதியீடு

செய்யப்பட்டமையினால், மதிப்புக் கூட்டு வரி வருமானங்கள் மீதான அனைத்து அதிகாரங்களும் மாநில ஆட்சிக்கே உரியதாகும்.)

2) சேவை (விற்பனை) த் தொழில்கள் மீதான வரிகள்

3) வர்த்தகத்தில் ஈடுபடும் தனிநபர்கள், கம்பனிகள் கூட்டுத்தாபனங்கள் ஆகியவற்றின் மூலதனம் மற்றும் சொத்துக்கள் மீதான வரிகள்.

4) பந்தயம், பரிசு சீட்டுக்கள், பரிசு போட்டிகள் மீதான வரிகள்.

5) மதுச்சாலைகள், அருந்தகங்களின் உரிமங்கள் உள்ளடங்கலான போதைதரும் திராவகங்களின் உற்பத்திகள், இருப்புக்கள், அவற்றின் போக்குவரத்து மற்றும் அவற்றின் விற்பனை மீதான கட்டணங்களும் வரிகள். அத்துடன் கள் இறக்குதலுக்கும் அதனை விற்பனை செய்வதற்குமான அனுமதி, வரிகள், மற்றும் கட்டணங்கள்.

6) பாராளுமன்றத்தினால் விலக்கப்பட்ட உற்பத்திகள் மற்றும் தொழில்கள் தவிர்ந்த ஏனைய உற்பத்திகள் மற்றும் தொழில்கள் மீதான தீர்வை வரிகள் (இது விடயமாக, தொழிற்சாலைகளின் அளவு அடிப்படையில், 50 தொழிலாளர்களுக்கு குறைந்த ஊழியர்களை கொண்ட தொழிலகங்களினால் உற்பத்தி செய்ப்பட்ட பொருட்களுக்கு, மாநில அரசாங்கம் தீர்வை வரிகளை விதிப்பதற்கான அதிகாரப் பகிர்வு அளிக்கப்படலாம்)

7) மோட்டார் வாகனங்களை பதிவு செய்தல் மற்றும் வாகன அனுமதி ஆகியவற்றிற்கான கட்டணங்கள்.

8) மருந்துகள் ஏனைய இரசாயனப் பொருட்கள் விற்பனை ஒப்பந்தங்களுக்கான உரிமங்கள் மீதான கட்டணங்கள் மற்றும் வரிகள்.

9) மாநிலத்திற்குள்ளேயிருக்கும் அசையும் அசையா சொத்துக்களை கைமாற்றுவதற்கான தீர்வைகள் மற்றும் வரிகள்.

10) பெருந்தெருக்களின் கட்டிட மற்றும் பராமரிப்புக்கான அறவீடுகள்.

11) விவசாய, தோட்ட மற்றும் பண்ணைத் தொழில்களில் ஈடுபடுவோரின் வருமானங்கள் மீதான வரிகள்.

12) மத்திய நிரலில் உள்ளடக்கப்படாத விடயங்கள் பற்றிய விதிகள், கட்டளைகள் சம்பந்தமான கட்டணங்களும், தண்டப்பணங்களும்.

13) மாநிலத்தில் உள்ள நீதிமன்றங்களுக்கு வழங்கப்படும் ஆவணங்களுக்கான முத்திரைப்பணம் அடங்கலாக நீதிமன்றத்தால் விதிக்கப்படும் கட்டணங்கள் மற்றும் தண்டப்பணங்கள்.

14) நிறைகளையும், அளவுகளையும் ஒழுங்குபடுத்துவதற்கான கட்டணங்களும் தண்டப் பணங்களும்.

15) நிலங்கள் தொடர்பான அரசுக்குரிய அத்தனை வருமானங்களும்.

16) அசையும் மற்றும் அசையாத தனியார் சொத்துக்கள் மீதான வரிகள்.

17) நாடாளுமன்ற சட்டங்களினால் மத்திய அரசின் வருமானத்துக்குரிய வளங்கள் எனப் பிரகடனப்படுத்தப்பட்டவை தவிர்ந்த கனிமங்கள், சுரங்கங்களின் உரிமங்கள் மீதான கட்டணங்கள் மற்றும் வரிகள்.

18) தேயிலை, இறப்பர், தென்னை தவிர்ந்த பெருந் தோட்டங்கள் தொடர்பான தீர்வைகள் மற்றும் வரிகள்.

19) மாநிலத்துக்குள் வரும், அல்லது மாநிலத்திலிருந்து வெளிச்செல்லும் பொருட்கள் மீதான வரிகள்.

20) வீதிகள் தொடர்பான சகலவிதமான வரிகளும்.

21) கேளிக்கை மற்றும் பொழுதுபோக்கு நிகழ்ச்சிகள் மீதான வரிகள்.

22) மாநில அரசு மேற்கொள்ளும் நிகழ்ச்சிகளுக்கும் திட்டங்களுக்கும் வெளிநாடுகளிலிருக்கும் தனிநபர்கள், தனியார் ஸ்தாபனங்கள், வெளிநாடுகள், சர்வதேச நிதிஉதவி வழங்கும் ஸ்தாபனங்கள் ஆகியவையினால் வழங்கப்படும் கொடைகள், உதவிகள் மற்றும் கடன் வசதிகள்.

23) வெளிநாடுகளில் வதியும் இலங்கையர்களால் வழங்கப்படும் பொதுக்கடன்கள் மற்றும் நன்கொடைகள்.

24) மாநில அரசு மேற்கொள்ளும் நிகழ்ச்சிகளுக்கும் திட்டங்களுக்கும் என உள்நாட்டில் தனியார்களிடமிருந்தோ அல்லது ஸ்தாபனங்களிடமிருந்தோ திரட்டப்பட்ட நிதி, நன்கொடை மற்றும் மாநிலத்தின் மக்களிடமிருந்து திரட்டப்பட்ட பொதுப்பங்களிப்பு நிதிகள்.

25) மத்திய அரசின் வரி மற்றும் வருமானங்களிலிருந்து மாநில அரசுக்கு அரசியற் சட்டத்தின் கட்டாயத்தின் பேரிலோ தேசிய நிதி ஆணைக்குழுவின் சிபார்சின் பேரிலோ அல்லது வேறுவகையாகவோ வழங்கப்படும் பகுதிகள்.

26) இரண்டு ஆட்சியமைப்புக்களுக்குமென உள்ள அதிகாரப் பகிர்வு பட்டியல்கள் எதிலும் குறிப்பிடப்படாத விடயங்களில் விதிக்கப்படும் வரிகள், தீர்வைகள் மற்றும் கட்டணங்கள் அனைத்தும்.

## 19b. மத்திய அரசாங்க நிதி

பின்வரும் பட்டியல் மத்திய அரசாங்கத்திற்கென திட்டவட்டமாக ஒதுக்கி வைக்கப்பட்ட நிதிவள ஊற்று மூலங்களாகும்

1) விவசாயம், தோட்டம், பண்ணை ஆகிய தொழில்களில் உள்ளோர் தவிர ஏனைய தனிநபர்கள், கம்பனிகள் மற்றும் கோப்பரேசன் ஆகியவற்றின் வருமான வரிகள்

2) மாநில அரசுகள் தீர்மானிக்கவும் திரட்டவுமென விடப்பட்டவற்றைத் தவிர்ந்த ஏனையவற்றின் மீதான உற்பத்தித் தீர்வை வரிகள்.

3) இறக்குமதி ஏற்றுமதி வியாபாரம் மற்றும் வணிகங்கள் மீதான சுங்க வரிகள் உட்பட அனைத்து வரிகளும்.

4) தேயிலை உற்பத்தி மற்றும் தேயிலைப் பெருந் தோட்டங்கள் தொடர்பான அனைத்து வரிகளும்,

5) இப்பட்டியலில் இருக்கும் விடயங்களின் மீதான வரிகளும் மற்றும் முத்திரைக் கட்டணங்களும்,

6) பங்குச் சந்தை, வருங்கால மூலதனச் சரக்கு ஆகியவைகளின் பரிமாற்றங்கள் மீதான வரிகள்,

7) அனைத்து வகைப்பட்ட நாளாந்த செய்திப்பத்திரிகைகள் மீதான சகல வரிகளும்,

8) மத்திய ஆட்சியின் கீழுள்ள பகிரங்க தொழில் நிறுவனங்களிலிருந்து கிடைக்கும் வருமானங்கள்

9) மத்திய அரசாங்கம் மேற்கொள்ளும் நிகழ்ச்சிகளுக்கும் திட்டங்களுக்கும், நாட்டிற்குள் தனியார்களிடமிருந்தோ ஸ்தாபனங்களிடமிருந்தோ திரட்டப்பட்ட நிதி, நன்கொடை மற்றும் பொது வைப்புத்தொகைகள்.

10) வெளிநாடுகளிலிருந்து மத்திய அரசாங்கத்தின் நிதிக்காக திரட்டப்படும் உதவித் தொகைகள், மற்றும் கொடைகள்.

11) மத்திய அரசாங்கம் மேற்கொள்ளும் நிகழ்ச்சிகளுக்கும் திட்டங்களுக்கும் வெளிநாடுகளிலிருந்தும் தனிநபர்கள், தனியார் ஸ்தாபனங்கள், வெளிநாட்டு அரசுகள், சர்வதேச நிதி உதவி வழங்கும் நிறுவனங்கள் ஆகியவையினால் வழங்கப்படும் கடன்கள், உதவிகள் மற்றும் கொடைகள்.

12) மாநில அரசுகளினால் திரட்டப்பட்டு மத்திய அரசிற்கு மாற்றம் செய்யப்படும் நிதித்தொகை.

13) மத்திய அல்லது ஐக்கிய அரசாங்கத்துக்குரிய அதிகாரப் பட்டியலில் உள்ளவை தொடர்பான, ஆனால் நீதிமன்றம் எவற்றினாலும் அறவிடப்படும் கட்டணங்கள் தவிர்ந்த, கட்டணங்கள்.

- மத்திய ஆட்சியின் பட்டியலிலுள்ள நிதிவருமானத்திற்கான மூலங்களின் எண்ணிக்கை, மாநில ஆட்சிகளுக்கான பட்டியலிலுள்ளவற்றின் எண்ணிக்கையோடு ஒப்பிடுகையில் குறைவானதாகத் தோன்றினாலும் உண்மையில், மத்திய அரசாங்கத்தினது வருமானங்களின் மொத்த அளவானது எல்லா மாநில அரசாங்கங்களின் கூட்டுமொத்த வருமானங்களின் வருவாயிலும் பார்க்க மிகவும் அதிகமாகும். ஏனெனில், வருமானவரி, சுங்கவரி மற்றும் உற்பத்திகள் மீதான தீர்வைவரி ஆகிய மிகப் பெரும் வருமானம் தரும் மூன்று பிரதானமான வருமான ஊற்றுகளும் மத்திய அரசாங்கத்தின் வசமே இருக்கின்றன. இப்பட்சத்தில் மத்திய அரசாங்கத்தின் வருவாயின் பெரும் பங்கு, தேசிய அபிவிருத்தித் திட்டங்களினூடாகவும், தேசிய நிதி ஆணைக்குழுவின் சிபார்சுகளினூடாகவும் வருடாந்த வரவு-செலவு திட்டம் மூலம் மாநிலங்களுக்கு பகிர்ந்தளிக்கப்படுதல் வேண்டும் என்பதற்கான தெளிவான ஏற்பாடுகள் அரசியல் யாப்பில் இடம் பெறுதல் அவசியமாகும்.
- மாநில கட்டுமானம் முழுமையாகவும் பயனுள்ளதாகவும் செயற்படும் நிலை வரும் வரையில், தற்போது நிலவும் அசாதாரணமான நிலைமைகளைக் கருத்திற்கொண்டு போதியளவு நிதியுதவியை மாநில அரசுகளுக்கு வழங்குவது மத்திய அரசாங்கத்தின் கடமையும் பொறுப்புமாகும்.
- சில முக்கிய வரிகள் நாடுமுழுவதிலும் ஒரே சீரானதாக இருக்க வேண்டும் என ஒரு அபிப்பிராயம் இருக்கலாம். அப்படியானவற்றில், மாநிலங்களின் தீர்மானங்களுக்கு உச்ச மற்றும் கீழ்மட்ட வரம்புகளை மத்திய அரசு வரையறுக்கலாம்.

### 19c. தேசிய பொருளாதார திட்டமிடல், மற்றும் நிதி ஆணைக்குழு

இந்தியாவில் தேசிய திட்டமிடல் ஆணைக்குழுவும், தேசிய நிதி ஆணைக்குழுவும் இரண்டு வெவ்வேறு நிறுவனங்களாக செயல்படுகின்றன. எனினும், இலங்கையைப் பொறுத்தவரையில், **"தேசிய பொருளாதார திட்டமிடல், மற்றும் நிதி ஆணைக்குழு"** என்ற பெயரில் இணைந்து இருக்கலாம். இந்த ஆணைக்குழுவிற்கு உப ஜனாதிபதியே தலைவராவார். சிறந்த தகுதிகளமைந்த ஒருவரை ஜனாதிபதி இந்த அமைப்பின் நிர்வாகங்கள் மற்றும் செயற்பாடுகளை கவனிக்கவும் வழிநடத்தவுமென உதவித் தலைவராக நியமிக்கலாம். இந்த உதவித் தலைவர் அமைச்சரவை உறுப்பினருக்கான அந்தஸ்தைப் பெற்றிருப்பார்.

வருமான வரி வருவாயிலிருந்து 75 சதவீதத்திற்குக் குறையாமலும், சுங்கவரி வருவாயிலிருந்து 50 சதவீதத்திற்குக் குறையாமலும், சமூக பாதுகாப்பு வரியிலிருந்து 90

சதவீதத்திற்கு குறையாமலும் மாநில அரசாங்கங்களுக்கு மத்திய அரசாங்கம் எதுவித கட்டாயங்களோ அல்லது நிபந்தனைகளோ இன்றி பகிர்ந்தளிக்க வேண்டும் என்பது அரசியல் யாப்பில் உள்ளடக்கப்பட வேண்டும். இந்த வருவாய்களை மாநில அரசாங்கங்களுக்கிடையில் பகிர்ந்தளிப்பதற்கான நெறிமுறைகளையும் சிபார்சுகளையும் தேசிய பொருளாதார திட்டமிடல், மற்றும் நிதி ஆணைக்குழு வருடாவருடம் மாநில அரசாங்கங்களுடன் கலந்து பேசி தீர்மானித்தல் வேண்டும். அந்த அடிப்படையில் இக்குழு மத்திய அரசாங்கத்துக்கு அறிவுரை வழங்குதல் வேண்டும்.

பகிர்ந்தளிப்பதற்கான நெறிமுறையைத் தீர்மானிப்பதற்கு, தேசிய பொருளாதார திட்டமிடல், மற்றும் நிதி ஆணைக்குழு, மாநிலங்களின் சனத்தொகையின் அளவு, ஏழ்மை விகிதம், பின்தங்கிய நிலைமைகள், நிறைவேற்றத்தில் இருக்கும் திட்டங்களின் முன்னேற்ற நிலை ஆகிய இன்னோரன்ன விடயங்களை கருத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும். எனினும், தொடர்ந்தெழும் வருவாய் மற்றும் செலவினங்களின் மேலாண்மை பாதிக்கப்படுமளவிற்கு வருடத்திற்கு, வருட விநியோக விகிதம் அதிக அளவுள்ள மாற்றம் அமைந்ததாக இருக்கக் கூடாது.

தேசிய பொருளாதார திட்டமிடல் நிதி ஆணைக்குழு, மத்திய அரசின் நிதிவருவாயிலிருந்து மான்யங்களையும் வரவுகளையும மாநில அரசாங்கங்கள் பெறுவதற்கான அடிப்படைகளையும், குறிப்புகளையும் சிபாரிசு செய்யும்.

தேசிய பொருளாதார திட்டமிடல் மற்றும் நிதி ஆணைக்குழு, மத்திய அரசாங்கத்தினதும், மாநில அரசாங்கங்களினதும் பொருளாதாரத் திட்டங்களை ஒருங்கிணைத்து, தேசிய பொருளாதாரத் திட்டமிடலையும், கொள்கைகளையும் தயார் செய்யும். இவ் ஆணைக்குழு திட்டங்களை அமுல்படுத்துவதற்கு இணைப்பாளர்களாகவும் கண்காணிப்பாளர்களாகவும் செயல்படுவதோடு, திட்டங்களை அமுல்படுத்துதல் சம்பந்தமான விடயங்களில், மத்திய அரசாங்கத்திற்கும் மாநில அரசாங்கங்களுக்கும் ஆலோசனைகளை, சிபாரிசுகளை வழங்கும்.

## 20. அரசு நிறுவனங்களில் இனவிகிதாசாரம்

சிறுபான்மை தேசிய சமூகங்களின் விகிதாசாரத்தின் குறைந்தபட்சமாவது கீழே கூறப்பட்டுள்ள அமைப்புக்களில் பேணப்பட வேண்டுமெனக் கட்டாயப்படுத்தும் நெறிமுறைகள் அரசியல் யாப்பில் இடம்பெற வேண்டும்-

1) தேசிய பாதுகாப்பும் மத்திய பாதுகாப்பு படைகள்

2) மத்திய பொலீஸ் படை

3) மத்திய அரசாங்க சேவைகள்

4) அரசாங்கத்தின் பகுதி நிறுவனங்களிலுள்ள சேவைகள்

அங்ஙனமே, அந்தந்த மாநில ஆட்சிகளின் கீழுள்ள இனவிகிதாசாரம் அமைப்புக்களின் தொழில் வாய்ப்புக்களிலும் மற்றைய வாய்ப்புகளிலும் பேணப்பட வேண்டும்.

மேற்குறிப்பிட்ட துறைகளில் தேசிய சிறுபான்மை இனங்கள் வெகு குறைவான விகிதாசாரத்தையே கொண்டிருக்கிறார்கள். 1987 க்குப் பின்னர் ஏற்படுத்தப்பட்ட சகல அரசாங்கங்களுமே இனப்பிரச்னையைத் தீர்ப்பதற்காக எவ்வளவோ வாக்குறுதிகள் அளித்தும் இவ்விடயம் சம்பந்தமான நிலைமையைத் திருத்துவதற்கான செயற்பாடுகள் எதனையுமே மேற்கொள்ளவில்லை. எனினும், தற்போது நிலவும் சம நிலமையின்மையைத் திருத்துவதற்கு இப்போதைய அரசாங்கம், அரசியல் யாப்பிற்கான பிரேரணைகளில் வேண்டிய நிபந்தனை களை உள்ளடக்குவதோடு நடைமுறையில் பிரதானமான அரச சேவைகளிலிருக்கும் பாரிய இடைவெளியை நிரப்புவதற்கு உடனடியாகவும் அவசரமாகவும் திட்டங்களை உருவாக்கி அமுல் படுத்துவதற்கான செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும்.

## 20a. உண்மையான தேசிய இராணுவத்தை கட்டியெழுப்புவதற்கு

இலங்கை இராணுவம், “சிங்கள இராணுவம்” என்ற தற்போதைய நிலையையிலிருந்து மாற்றப்பட்டு உண்மையான “தேசிய (தேசியரீதியான நிலைமைகளைப் பிரநிதித்துவப் படுத்தும்) இராணுவம்”. என்ற நிலைக்கு மாற்றப்பட்டால் ஒழிய, வெறும் அரசியல்யாப்பு சீராக்கல் மூலமாகவோ அல்லது சில சலுகைகளை அளிப்பதன் மூலமாகவோ உண்மையான ஐக்கிய இலங்கையைக் கட்டியெழுப்பிவிட முடியாது. இலங்கை அரச படைகளின் கட்டுமானம் எல்லா சமூகங்களிலுமுள்ள இளைஞர்களையும் அதிக அளவிலான வீதத்தில் சேர்த்து ஒற்றுமையாகவும் காத்திரமாகவும் இணைந்து செயற்பட வைத்தால் மாத்திரமே இலங்கையின் சகல சமூகங்களினதும் நலன்கள் சம்பந்தமாக எதுவித பாரபட்சமுமின்றி அது செயற்பட முடியும். இதன் மூலம் மாத்திரமே தேசிய சிறுபான்மை சமூகங்களிடம் அரசின் இராணுவத்தினை “தங்களது ஆயுதப் படைகள்” என்ற உணர்வினை ஏற்படுத்த முடியும்.

குறுகிய காலத்தில் அந்த இலக்கை அடைந்திட முடியாது என வாதிடலாம். எனினும், இம்மாற்றம் கொள்கையளவிலாயினும் உடனடி அவசியமானதொன்றென அரசாங்கம் ஏற்றுக்கொண்டு சிறுபான்மை சமூகங்களின் தலைவர்களை தொடர்ச்சியாக அதில் ஈடுபடுத்தி அந்நிலையை நோக்கி தீவிரமாகச் செயல்பட வேண்டும். காலம் எடுக்கலாம். ஆனாலும், படிப்படியாக அதனை அடைய முடியும், அதனை அடைவது அவசியமானதுங்கூட.

தேர்தல் அரசியலை ஏற்று செயற்படும் தமிழ்க் கட்சிகள் தற் பாதுகாப்பிற்கும் எல்ரிரிஈ யினரிடமிருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்காகவும் ஆயுதங்களையும், ஆயுதம் ஏந்திய சிலரையும் வைத்திருக்க வேண்டியது தவிர்க்க முடியாததாக இருக்கலாம். இங்குமங்குமாக வெவ்வேறு அரசியல் கட்சிகளைச் சார்ந்த சில நூற்றுக்கணக்கானவர்கள் இராணுவத்தோடு சேர்ந்து வடக்கு- கிழக்கில் செயற்படலாம். இந்த வழிமுறைகள் எவ்வகையிலும் அரசியல்-சமூக நிலைமைகளை மாற்ற முடியாது என்பதுடன், நடைமுறையில், இந்தக் குழுக்கள் அரசியல் ரீதியாகவும் சமூக ரீதியாகவும் தங்களது சமூகத்தினரிடமிருந்து அன்னியப்படுத்தப்படும் நிலையே அதிகரித்துள்ளது.

எல்ரிரிஈயை இராணுவ ரீதியாக கையாளுவதற்குத்தான் இந்த உடனடியான முன்னுரிமை கொடுக்கப்படுகின்றது என்பதில் ஐயமில்லை. ஆனாலும், தேசத்தின் வெவ்வேறு கள, சமூக நிலைமைகளைப் பிரதிபலிப்பதும் பிரதிநிதித்துவப்படுத்துவதுமாக இலங்கை அரச படைகளின் அமைப்பை மீளக் கட்டியெழுப்புவது நாட்டின் நீண்டகால நோக்கங்களுக்கும் ஸ்திரத்தன்மைக்கும் அடிப்படையான தேவையாகும் என்பதோடு, அதுவே புலிப் பயங்கரவாதத்தை மட்டுமல்லாது அனைத்து அதிதீவிரவாத, மக்கள் விரோத, சமூக விரோத சக்திகளையும் அரச படைகள் இலகுவாகவும் காத்திரமாகவும் கையாளக் கூடிய நிலைமையை ஏற்படுத்தும்.

அரச படைகளின் கட்டுமானத்தில் புலிகள் அமைப்பினர் தமது உளவாளிகளையும் அயுததாரிகளையும் ஊடுருவி நிலைகொள்ளச் செய்து விடுவார்கள் என ஒரு சாரார் கருத்துக் கொண்டிருக்கின்றனர். இவ்வாறானதொரு கருத்தின் அடிப்படையில் தமிழ் இளைஞர்களை அரச படைகளில் சேர்ப்பதைத் தடுப்பதோ அல்லது சேர்ப்பதற்கு தயக்கம் காட்டுவதோ சரியானதல்ல. இனரீதியாக தமிழர்கள் மீது இலங்கையின் அரச படையின் அமைப்புக்களில் பாரபட்சம் காட்டப் படுவதில்லை என்பது நிறுவப்பட வேண்டும். சிங்கள இளைஞர்களை அரசபடைகளில் சேர்க்கும் விடயத்தில் கூட ஊடுருவுபவர்களும், விட்டோடுபவர்களும் இருந்துதான் இருக்கிறார்கள் என்பதைக் கடந்த கால அனுபவம் காட்டுகிறது. எனவே, அரச படைகளில் ஆட்சேர்ப்பதில் மேற்கொள்ளப்பட வேண்டிய கவனங்கள் மற்றும் தணிக்கை ஏற்பாடுகளுடன், எச்சரிக்கையாக நடந்து கொள்வதற்கும் அவசியமாக கடைப்பிடிக்கப்பட வேண்டியவற்றிற்கும் இடையேயான சமாந்தரங்களைப் பேணுவதில் பொதுவானதுவும், அறிவுக் கூர்மையானதுமான அணுகுமுறையைப் பயன்படுத்துதல் வேண்டும். எக்காரணத்திற்காகவும், தமிழ் இளைஞர்களை அரசபடைகளில் அணிதிரட்டும் விடயத்தில் மென்மையான

தந்திரங்களைக் கடைப்பிடிப்பதானது மென்மேலும் தமிழர்களை அரசின் செயற்பாடு களிலிருந்து அன்னியப்படுத்துவதோடு புலிகளின் குறுகிய பாசிச தமிழ்த்தேசிய பயங்கர வாதத்துக்கும் சிங்கள மேலாதிக்க அதிதீவிர வாதத்துக்கும் பெருமளவில் உதவி செய்வதாகவே அமையும். சகல இன சமூகங்களும் சகோதரத்துவத்துடன் சமத்துவமாக இணைந்து வாழ எடுத்துக்கொள்ளப்படும் முயற்சிகளிலிருந்து பரந்துபட்ட தமிழ் பொதுமக்களை மேலும் விலக்கி வைப்பதாகவே அமையும்.

ஆகவே, ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியானது இலங்கையின் அரச படைகளில் தமிழ் இளைஞர்களைக் காலதாமதமின்றி பெருமளவிற் சேர்ப்பது மிகவும் இன்றியமையாதது என்பதை அழுத்தமாகத் தெரிவிக்கிறது.

## 20b. பொது சேவை மற்றைய சேவைகளில் இனவிகிதாசாரம்

15 வருடங்களுக்கு மேலாக நடைபெற்றுக் கொண்டிருக்கும் யுத்த நிலைமையானது முதன்மைக் காரணமாகவும், அத்துடன் மேலதிகமாக, கடந்த கால அரசாங்கங்களினதும் அலுவலர்களினதும் மறைமுகமானதும் நேர்மையற்றதுமான முறையில் மேற்கொள்ளப்பட்ட கையாளுதல்களினாலும், பொது நிர்வாகம் மற்றும் சேவைகளில், பிரதானமாக உயர்மட்டத்தில், பாரிய அளவில் சமாந்தரம் அற்ற நிலமை ஏற்படுத்தப்பட்டுள்ளது. இக் குறைபாட்டை நீக்குவதற்கு காத்திரமான முயற்சிகள் எதுவும் இற்றைவரை எடுக்கப்படவில்லை என்பதே உண்மையாகும். சகல சேவைகளின் அமைப்புக்களிலும் உள்ள இனரீதியான சமாந்தரமற்ற நிலையின் எண்ணிக்கை தெளிவாகவும் முழுமையாகவும் இனங்காணப்பட்டு தீர்மானகரமாகவும் உறுதிப்பாட்டுடனும் அவற்றைத் திருத்துவதற்கான வழிமுறைகள் இதயசுத்தியுடன் தொடங்கப்பட வேண்டும்.

சாதாரணமான மற்றும் வழமையான செய்முறைகள் மூலம் இந்த இலக்குகளை அரசாங்கம் எய்திட இயலாது. எனவே, குறிப்பிட்ட கால அட்டவணைத் திட்டத்துக்குள் இவை தொடர்பாக நடைமுறைப்படுத்த வேண்டிய இலக்குகளை அடைவதற்கு உரிய வகையில் பிரத்தியேக கவனம் செலுத்தி திட்டங்களை அமுல்படுத்த வேண்டும்.

((((((((()))))))))))